பதிவு எண் 2041 **KUDI ARASU.** தனிப்பிரதி விலை {உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா}

குடி அரசு

உள்நாட்டு சந்தா முன் பணம்	...	ரூ 3—0
6 மாத சந்தா ,,	...	ரூ 1-12
வெளிநாட்டிற்கு ,,	...	ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ௵ ஐப்பசி ௴ 19உ. (4—11—23) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 28

நிமிஷக்கணக்கில் குணம் அடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய். ஆச்சர்யநிவர்த்தி!!

சுவாசகாச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர்.

நீண்டகால சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, தொண்டை இவைகளில் உண்டாகும் சகலவித கஷ்டங்களையும் நமது ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன், இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசிதீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 43 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0. உள்நாட்டுக்கு தபால் செலவு 0—4—0.

புரோப்ரைட்டர் - திருநாவுக்கரசு வைத்தியசாலை,
செவ்வாய்ப்பேட்டை, சேலம். (தென் இந்தியா.)

ஆச்சர்ய ஜோதிடம்.

இந்தியாவெங்கும் முதன்மை பெற்றது.

உங்கள் சரியான எதிர்கால பலனைத் தெரிந்து பதில் எழுத 5 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் தனிக் கேள்விகளுக்கும் அணா 4. ஒரு வருஷம் மாதவாரியாகப் பலன்கள் எழுத ரூ. 2. நஷ்டட ஜாதகம் எழுத ரூ. 5. கடிதம் எழுதும்போதுள்ள நேரத்தையாவது ஜாதகக் குறிப்பையாவது குறிப்பிட்டு எழுதவேண்டியது.

ஜயவரப்ரசாத ரக்ஷை 1-க்கு ரூ. 2—8—0.

இந்த ரக்ஷை ஓர் மூலிகை சம்மந்தமானது. சாஸ்திர முறைப்படி தயார் செய்தது. இதன் சில முக்கியமான குணங்கள் வியாபார விர்த்தி, உத்தியோக உயர்வு, அதிகாரிகளின் விஸ்வாசம், வியாஜ்ஜியத்தில் ஜயம், விரோதிகள் வசீகரம், இன்னும் நாம் நினைத்த காரியங்கள் ஜயம். வி. பி. பி. சார்ஜி வேறு.

குறிப்பு;— வெளிநாடுகளில் இருந்து ஆர்டர் செய்யும் நண்பர்கள் முன்பணமாக அனுப்பவேண்டியது.

மேனேஜர், ஸ்ரீ சிவசுப்ரமணிய ஜோதிடாலயம்,
திருத்தணி, சித்தூர் ஜில்லா. (தென் இந்தியா)

போட்டோ ஆல்பம்.

நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலநிறமுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

கி. கிருஷ்ணா ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

இனாம்! இனாம்!!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜினன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

முன் விலை ரூ. 14. இப்போழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எந்த டிஸைப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ, ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

மாதமொன்றுக்கு	ரூ. 1—6—0
சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு	„ 1—0—0
தனிப்பிரதி	0—0—6
அன்னிய நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு	„18—0—0

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கும், லேபில்களுக்கும், இன்னும் இதர அச்சுவேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லைன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

25 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கப்படுகிறது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

ஜான் பிரான்கீஸ், சொந்தக்காரர்
பான்டியன் ஸ்டுடியோ
173, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை

எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

டேபில் டைம்பீஸ் இனாம்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜை பின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபிள் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். சூக்ஷ்மங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜீனோன் வாட்சு கம்பெனி,
மின்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச்செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. லாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. கதிர்வேல சாவடி,
[illegible]

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

'ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு)   வெளிவருகின்றது   (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோஹரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

நூதனமாகக் கண்டுபிடித்துத் தயாரித்துவரும்

கை தையல் மிஷின்.



இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த நூதன மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் பணம் சம்பாதிக்க முடியும். இதனால் கை குட்டைகள், ஜாக்கெட்டுகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணிகளிலும் மல்துணிகளிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் செய்யலாம். ஸவாரத்திரிக்காகப் பெரிய பொம்மைகளுக்கு நன்கு அலங்காரம் செய்ய உதவும்.

உறுதியான மெஷின் ஐம்பதுவருஷமானாலும் கெடாது.

விலை ரூபாய் 4—15—0   தபால் செலவு இனாம்.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி.

தபால் பெட்டி 119, மதராஸ்.

திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு சார்டிகள் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.

இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.

விலைவிபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

கடவுளின் தேவாம்சம்
மற்ற தேசங்களிலிருப்பது போல
நமது நாட்டில் ஏதனுலில்லை.

கைவல்ய சாமியார் எழுதுவது.

மஞ்சளும், சுண்ணும்பும் சேர்ந்தால் சிகப்புண்டாகும் தன்மை மஞ்சள் சுண்ணும்பின் சக்தி என்றும் அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை சக்தியே சிகப்பை உண்டாக்குவதென்றும் சிகப்பு இன்னெரு வஸ்துவால் மாற்றப்படுவதால்இயற்கைக்கு மேற்பட்ட சக்தியொன்று உண்டென்றும், அதுவே கடவுளென்றும், அந்த கடவுளாலேயேஉலகமும், அவ்வுலகத்திலுள்ளமற்றெல்லாமும்உண்டாக்கப் பட்டனவென்றும்அவற்றுள்மனிதன் அக்கடவுளையுடையவே உண்டாக்கப் பட்டான் என்றும் தர்க்கித்த சாஸ்திரங்களும் அதில் ஊடாடினவர்கள் அவரவர்கள் புத்திக்குத் தோன்றினவை எழுதி வைத்த சாஸ்திரங்களும் அனந்தம். இவை மன எண்ணத்திற்கும் புத்தியின் ஆலோசனைக்கும் எட்டாதவிஷயமானதால் தர்க்கத்தில் தோற்றவர்களும் ஜெயித்தவர்களுமில்லை. அவை கிடக்கட்டும்.

கடவுளால் உண்டாக்கப்பட்ட உலகத்தில் நமக்குள்ள போக போக்கியங்களை அனுபவித்து அவருடைய உலகமான மோக்ஷத்தில் போய்ச் சேருவதற்கு சமயங்களும், அவை ஒட்டி அநேக சாஸ்திரங்களும், விதிகளும், அவரை ஆராதிக்கும் மார்க்கங்களும், அதை நடத்தி வைக்ககுருக்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதன் வழியே ஆச்சாரி பேச்சைக் கேட்டு அநேக காலமாக நடக்கிறோம்; அதற்காக அநேக கோவில் கட்டி வைக்கிறோம். அவை கட்டப்பட்டதின் கலக் கணக்கு நமக்குத் தெரியாது. தெரிந்ததாகச் சொல்லும் நம் பழய பண்டிதர்கள் ஒவ்வொரு கோவிலுக்கும் சதுர்யுகக் கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். திண்ணைப் பள்ளிக்கூடத்தில்இந்தப் பண்டிதர்கள் எண்சுவடி படித்து முடிந்தவுடன் வருஷப் பிறப்பென்னும் நூல் படித்தவர்கள். பலகோடி வருஷம் சேர்ந்தால் ஒரு சதுர்யுகமென்பது அவர்களுக்குத் தெரியும். எதையும் நம்ப அவர்கள் சாஸ்திரம் கட்டளையிட்டிருப்பதால் கணக்கு நிர்ணயம் பண்ணும் வழக்கம் அவர்களுக்கில்லை. இந்தக்காலத்துப் பண்டிதர்களுக்கு வருஷப்பிறப்பு நூல் தெரியாது. அதிலுள்ள விஷயங்கள் தெரியும். உபாத்தியாயரிடம் பாடம் கேட்காததினுல் சதுர் யுகத்திற்கு வருஷம் இவ்வளவு என்பதை இவர்கள் கணக்குக் கூட்டிப்பார்த்ததில்லை. இந்த சதுர் யுகக்கணக்கு ரிஷிகளுக்குள் புசுண்ட மகாரிஷிக்குத் தான் தெரியும். ராமர் வசிஷ்டரிடம் கேட்ட கேள்விக்கு இருவரும் புசுண்ட மகாரிஷியிடம் போய் கால நிர்ணயக்கணக்கைத் தெரிந்தார்கள் என்பது ஞானவாசிஷ்டக்கதை. கல்லைக் கொண்டும் மண்ணைக் கொண்டும் இந்தக் காலத்து இங்கிலீஷ் சாஸ்திரத்தின் உதவியைக் கொண்டும், சிற்பிகள் கால நிர்ணயம் கற்பித்தால் சமயக்கட்டு சாஸ்திரங்களெல்லாம் கலகலத்து குப்புற விழுவதைப் பார்த்து பண்டிதத் திறமையும் பதுங்கிப் பறந்தாலும் இதிகாச புராணங்கள் இந்தக் கணக்கை ஒத்துக்கொள்ளாது; குடிஅரசின் குட்டிக்கணக்கு அந்தக் கணக்கை கூடிய சிக்கிரத்தில் கூட்டிக்காட்டிவிடும். விபீஷணரே சீரங்கத்தைப் பூசித்தாரென்றும அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையாக சீரங்கத்திற்கும் மதுரைக்கும் வந்ததாகவும் பாரதம்சொல்லுகிறது. மதுரையின் வைகை நதியை வர்ணிக்கையில் சம்பந்தர் சமணர்களிடம் வாது செய்த திருவிளையாடல் புராணக் கதை பாரதத்தில் காணப்படுவதைப்பற்றி ஒரு அர்ச்சுனனுக்கு முன்னுல் ஒரு திருஞான சம்பந்தர் இருந்தாரா என்பதை பண்டிதர்கள் புத்தி தெளிந்த பின் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நடராஜப் பெருமாள்மூவாயிரம்தீக்ஷதப்பாப்பரக்குடும்பங்களுடன்கைலயங்கிரியைவிட்டுசிதம்பரத்திற்கு வந்துகுடியிருந்த காலம் நமக்குக்கணக்கில்லை. யவனர், ரோமர், பாரசீகர், மொகலாயர், ஆப்கானியர், முதலியவர்கள் கைபர் கணவாயைத் தாண்டுவதற்கு முன்ரு பின்ரு? நடராஜ பெருமான் தில்லைவாழ் அந்தணர்களை சிதம்பரத்திற்கு அழைத்துக் கொண்டு வந்ததின் கணக்கிற்கு அகச்சான்றயில்லை. "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று சிவபெருமான் எழுதிக் கொடுத்த ஒரு ஓலை மட்டும் செல்லரித்து மண்மூடிப் போகாமல் இருந்ததே தவிர மற்ற கணக்கெல்லாம் செல்லரித்தும் மண்மூடியும் போயிற்றும். எப்படி இருந்தாலும் கடவுளை ஆராதிப்பதற்கு நமது கோவில்களெல்லாம் அநேக காலங்களாக இருக்கிறதென்றே ஏற்படுகிறது. அந்தக்காலம் முதற்கொண்டு இன்னுள் வரையிலும் கோவிலையும் ஆராதனையையும் விடாமல் நானே செய்து வருகிறோம்- அப்படியிருக்க கடவுளின் கருணையாம் தெய்வாம்சம் பிறர் நாட்டைப்போல நம் நாட்டிலில்லாமலிருப்பதற்குக்காரணமென்னவென்று 'குடி அரசு' கேட்கிறதே ஒழிய கடவுள் உண்டா இல்லையா? என்பது போன்றவைகளைத் தர்க்கிக்க வந்ததன்று.

இதுவரையிலும் கடவுளுக்குச்செய்த கைங்கிரியம் சரியா தப்பா? கடவுளைப்பற்றி பெரியவர்கள் சொன்ன சாஸ்திரங்களில் நேர்வழியில் நடந்தோமா? இல்லையா? கடவுள் கட்டளையும் சாஸ்திரங்களின் உண்மையும் நாம் நடத்திவிருப்போமேயானுல் எல்லா பாக்கியமும் நிறைந்த நம்நாட்டில் கடவுளின் தெய்வாம்சம் குறைவு பட்டுக் காண்பதற்குக் காரணமென்ன? நாம் உலகத்தை அறிந்த நெறிதான் பிழையா? மனித இயல்பை நேரே அறியாமல் சாஸ்திரத்தை இஷ்டம் போல் திருப்பி அதனுடன் சம்பந்தம்வைத்துக் கொண்டதினுலா? மானுஷீகத்தின் பொது அறிவைக்கெடுத்த தன்னலக்காப்புச் சுவரின் பின்னே ஜாதிய க்ஷேமமென்று கட்டின வழி நேர்வழிதானு? அன்பேசிவம் சிவமே அன்பு என்னும் கடவுளால் மானுஷீக அன்பாகிய தன்னை மூலாதாரமாக உடைய நமது சமய நேர்வழியில் தனக்குக்கிடைத்த அனுபூதியை நம்நாட்டு மக்களுக்குக் கொடுக்க மறுத்த குற்றமா? ஒரு விளக்கு மங்கினதைக்கருதி மற்றொரு விளக்கு ஏற்றுவதற்குத் தடையாகக் காட்டும் ஸ்மிருதியின் கொடுங்கோலா?

எல்லா தேசங்களிலும் நடக்கும் திருவிழாவிற்கு தெய்வம் நம்மையும் கூப்பிடுகிறது. சிறிது பணக்காரன் வந்தால் பல்லைக்காட்டும் ஆச்சாரி புரட்டிற்கு அஞ்சி நாம் அத்திருநாளில் கலந்து கொள்ளுவதற்கு ஏற்ற படிப்பு நமக்கில்லையா? பூர்வீக சாஸ்திரம் தர்ம விதியை தெய்வீகமாக எண்ணினதாகப் பெருமை பேசி அந்த விதியைக் காற்றிலே தூற்றி விட்டு ஜனத்தைக் காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கை பலவிதமான தந்திரங்களால் கற்பிக்கப்பட்டிருக்கும் கல்நெஞ்சத்தினுலா? புறத்திலிருந்து இடைவிடாமல் நம்மீது அவமானமும் கஷ்டமும் பட்டுப் பட்டு தீண்டலாயிருப்பதைச் சுத்தி பண்ணி தீர்ப்பதற்கு பண்டிதர்கள் உணர்ச்சியான படிப்பு படிக்க வில்லையா? நம் நாட்டில் ஆசாரமும் அனுஷ்டானமும் சமயப் பூசையும் சாஸ்திரப்பூச்சும் உடைய அநேகர் கடவுள்பேரை மட்டும் வாயளவில் சொல்லி கட்டித் தழுவி அந்தக் கடவுள் தலையில் தன்னலத்தை வைத்து சமயம் வருகையில் சமயப்போர்வையைச் சுருட்டி தான் பிடித்திருக்கும் கடவுளை கைநழுவ விட்டுவிடும்படிக்கு கோடிகள் பக்தியின் ஏமாற்று? நம்மிடத்தில் மகத்தாயும், ஆக்கிரமமாகவும், நாயகமாயும், அமரமாயும் உள்ள அம்சத்திற்கும் மற்றுமுள்ள சர்தவத்திற்கும் நாதன் நீயே என்று ஸ்துதித்ததும், படைத்த பரமா அன்னமும் கடவுளுக்கு இனியும் எட்ட வில்லையா? அநேக நக்ஷத்திரங்களின் ஒளியானது இனியும் பூமிக்கு வந்து சேரவில்லை என்றுவானசாஸ்திரிகள்சொல்லுவது போல் அதிதூரமாக இருக்கும் கடவுளுக்கு தேவாரப் பிரபந்தம் இனியும் போய்ச் சேரவில்லை என்று சமய வாதிகள் நினைக்கிறார்களா? சேர்ந்திருந்தால் இந்த வழி துக்கத்திலும் பிளேக் பஞ்சத்திலும் தான் கொண்டு சேர்க்கும் வழியா? தெளிவான யோசனையும் பெருந்தகையுடைய உள்ளமும் நேர்மையுடையவர்கள் உலகமுழுவதுமிருப்பது போல்நம் நாட்டிலில்லையா? பின் என்ன காரணத்தால் கடவுள் அம்சம் நம்தேசத்தில் குறைவுப்பட்டுக் காண்கிறது. அந்த அம்சம் வந்து சேரும் வழி என்னவென்று ஆலோசிப்பதற்கே நீங்களெல்லாம் ஒன்று பட்டு உண்மை தெய்வாம்சம் கண்டுபிடிக்கவே 'குடி அரசு' கூப்பிடுகிறது.

'குடி அரசை' நாஸ்திகமென்றும் சாஸ்திரப்படிப்பில்லை என்றும் ஆராய்ச்சி இல்லை என்றும் சொல்லுகிறவர்கள் 'குடி அரசை'ப் படித்துப் பார்க்கவேண்டும். தன்னை மதித்து நானென்னும் தன்மைபோடு கூடியே ஐம்பத்தொன்பதே முக்காலே மூன்று வீசநாழிகையும் ஜீவமயத்திலிருந்து விட்டு கற்பூர தீபம் காட்டுகையில் மட்டும் கன்னத்தில் அடித்துக் கொள்ளுகிறவன் ஆஸ்திகனும். சாஸ்திர நிச்சயத்திற்கும் அனுபோகத்திற்கும் ஒத்த விஷயங்களில் அவர்களுக்கு சமாதானம் சொல்லுவது 'குடிஅரசின்' பொறுப்பென்பதை 'குடி அரசு' உணர்ந்திருக்கிறது. பல பல காலமாகப் பண்டிதர்கள் தாங்கள் படித்த சாஸ்திரத்திலும் பழகின சமயத்திலும் பற்றுடையவர்களாய் அதற்குத் தகுந்த புராணக் கதைகளைக் கொண்டே தர்க்கம் செய்தும் பிரமாணம் காண்பித்தும் திருப்தியடைந்தார்கள். இந்த காலத்தில் பல ஏடுகளைப்படித்து பொது அறிவின் பழக்கம் தெரிந்து அந்த வழியே தர்க்கம் செய்யும் நியாயங்களுக்கு பண்டிதர்களின் குறுகிய புத்திக்குட்பட்டுப் போகையில் 'குடி அரசு' பெரியவர்களையும் கடவுளையும் தூஷிக்கிறது என்று சொல்லுவதைத்தவிர வேறு வழி என்ன இருக்கிறது. கலாசாலை மாணவர்கள் மனதிலும் புத்தியிலும் வெளியிலும் பண்டிதர்களை வேடிக்கையாக ஏன் நினைக்கிறார்கள் என்பதை பண்டிதர்கள் நேரான வழியில் ஆலோசித்துப் பார்த்தார்களானுல் அவர்கள் அஞ்ஞானம் விலகும்.

நம் நாட்டிலில்லாத கடவுளா பிற நாட்டிலிருக்கிறது. தில்லையில்நடராஜப்பிரபு ஆடினதுபோல் வேறுஎன்நாட்டிலாவது ஆடினுரா? தில்லைவாழ்அந்தணர்களின் அடிமைக்கும் அடியேன் என்று சிவபெருமான் எங்காவது சொன்னுரா? எல்லா ஏடுகளும செல்லரித்து மண்மூடிப்போயும் இந்த ஒரு ஏட்டை சிவபெருமான் எவ்வளவோ அதிக ஜாக்கிரதையாகக் காப்பாற்றி நம் நியாயண்டார் நம்பி வந்ததும் அவர் கைக்குப் போய்ச் சேரும்படியாகச் செய்த கருணையை இதுவரையிலும் யார் மறந்தார்? நம்பியோ பிள்ளையாரின் மாணாக்கன். இந்த காலத்துப் பிள்ளையாரைப் போன்றதல் அந்த காலத்துப் பிள்ளையார்கள். எழுநூறு வருஷங்களுக்கு முன்னிருந்த பிள்ளையார்கள் வைத்த படையல்களையெல்லாம் வாரி

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

சுயமரியாதையும் சீர்திருத்தமும்.

திரு. ரா. சௌரிராஜன் எழுதுவது.

சீர்திருத்தம் என்றசொல்லும் "நாகரீகம்" என்ற சொல்லைப்போல் அர்த்தமற்ற தன்மையில் தற்காலத்தில் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் சீர்திருத்தம் செய்வதாக விளம்பரப் படுத்தி வெளிவந்த சீர்திருத்தக்காரர்கள் மனித வாழ்க்கையின் தன்மையை அறிந்துகொள்ளாமல் இவ்வுலகத்தில் மனிதனுடைய நிலை என்னவென்பதைத் தெரிந்துகொள்ளாமல் இயற்கையாகிய நல் வழியை உலகப்பற்றுடையதென வெறுத்து அறிவாளிகளும் அறிந்து கொள்ள முடியாததொரு-இயற்கைக்கு மேம்பட்டதொரு-வழியிலேயே சென்றுவிட்டார்கள். அவர்கள் நிகழ் காலத்தை மறந்து எதிர்காலத்தைநோக்க ஆரம்பித்தார்கள். மனிதனுடைய கஷ்டங்கள் எதிர்காலத்தில் நன்மையைத்தருவதாகக் கருதப்பட்டன. தன்சகோதரன் படும்துன்பத்துக்குக் காரணம் தானல்லவென்றும் அவன் பூர்வஜென்மத்தில் செய்த கர்மத்தின் காரணமாக துக்கத்தை அநுபவிக்கிறான் என்றும் படியாத பாமரர்களும் படித்த அறிவாளிகளும் "மனிதர்களின் தந்தையாகிய கடவுளின்' அருள்பெற்ற மதத்தலைவர்களும் கருதினார்கள். இதைவிட ஜனசமூகத்தை பாழ்படுத்துவதற்கு வேறென்னவேண்டும்?

சுகமாக வாழ்வதே மனிதவாழ்க்கையின் முடிவும் நோக்கமுமாகும். எவனொருவன்தானும் சுகமாக வாழ்ந்து பிறர்வாழ்க்கையையும் இன்பமானதாகச் செய்கிறானோ அவனே அறிவாளி. எவனொருவன் ஆடையில்லாதவர்களுக்கு வஸ்திர மளிக்கிறானோ, எவனொருவன் துன்பப்படுபவர்களைக்கண்டு அனுதாபங்கொண்டு அத்துன்பத்தை நீக்கமுயற்சிக்கிறானோ, எவனொருவன் நோயாளியின் கொடிய நோயைக்கண்டு பரிதாபப்பட்டு மனிதனால் தீர்த்துவிடக்கூடியது என்றுகருதி அதை தீர்க்க முற்படுகின்றானோ, எவனொருவன் தன்னைப்போலவே எல்லோரும் "படைக்கப்பட்டிருக்கிறார்கள்" (தோன்றி யிருக்கிறார்கள்) என்றும் தன்னை விரட்டி வருத்திபபசி அவர்களையும் பீடிக்கும் என்றும் கருதுகிறானோ, எவனொருவன் "நாமே நம் உலகத்துக்கு அதிபதி" என்றும் 'நம்முடைய அறிவே நமக்கு அரசன்' என்றும் எவனொருவன் இவ்வுலகத்தைப்பாழ்படுத்தும்படியான துன்பங்களும் துயரங்களும் மக்களிடத்தில் மக்கள் கொள்ளும் அன்பினாலும் அபிமானத்தினாலும் இவ்வுலகத்தைவிட்டு துரத்தியடிக்கப்படுமென்றும் தன்னம்பிக்கை கொண்டிருக்கிறானோ அப்பேர்ப்பட்டதொரு மனிதனையேயுலகம் நேசிக்கிறது; அப்பேர்பட்ட மனிதர்களையே உலகம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறது. அப்பேர்பட்டவர்களாலேயே உலகம் முன்னுக்குவர முடியுமென்று நம்புகிறது.

கைவிடப்பட்டதொரு தன்மையிலிருக்கும்படியானதொரு நோயாளி எப்படி வைத்தியன் சொல்லியபடி கொஞ்சமும் தவறுதலின்றி நடந்து கொள்ளுகிறானோ, எப்படி நோயாளி பிணிக் கொடுமையில் துன்பமுறும் சமயத்தில் தன்னுடைய உயிரைக்காப்பாற்றுவது வைத்தியனென்று நம்புகிறானோ, அதேபோல உலகம் வறுமைப்பிணியினால் வாடும்பொழுதும் கொடிய தொத்துவியாதிகளால் துன்பமுறும் சமயத்திலும் தன்னுடைய துன்பங்களையும் துயரங்களையும் ஒருவரும் கவனியாது கைவிடப்பட்ட தன்மையில் இருக்கின்ற சமயத்திலும் சீர்திருத்தக்காரர்களின் சொல்லுக்கு செவிசாய்த்தது. கொடிய காயங்களால் துன்பமுறும் நோயாளியான வன் வைத்தியன் காயங்களை கத்திகளால் அறுக்கும்பொழுது உண்டானதுன்பம் அதிகமாக விருந்தாலும் தன்னுடைய காயம் சுகமடைந்தால் போதுமென கருதுகிறான்-மருந்துகளால் காயத்தைச் சுகப்படுத்த முடியுமென்று அவன் அறிந்திருந்தால் அவன் காயத்தினிடம் கத்தியைக்கொண்டுவரக்கூட அனுமதியான். ஏனெனில் கஷ்டப்படாமல் தன்னுடைய கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ள அவன் வழி அறியான். மருந்துகளால் சுகமடைய முடியாதென்று நிச்சயமாகத் தெரிந்தபிறகு அவன் தன்னுடைய கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ள அதிக துன்பமுறவும் துணிகின்றான். அதேபோல காப்பாற்றுவாரொருவருமின்றி நிராதரவாகக் கைவிடப்பட்டபொழுது உலகமானது மதத்தலைவர்களும்குருக்கள்களும்காட்டிய கொடிய வழியையும் பின்பற்றத் துணிந்தது. குழந்தைகளையும், மனிதர்களையும், ஆடு மாடுகளையும் கொன்று பலிகொடுத்து கோவில்களில் நான் தலைமுறையல் உள் அன்புடன் கடவுளை வேண்டிவந்தது. கடவுளின் மனதில் இரக்கத்தை உண்டுபண்ண வேல்களைத்தன் தேகமெங்கும் குத்திக்கொண்டது. இரத்தம் ஆறாகப்பெருகி ஓடச்செய்தது இவ்வளவு செய்தும் கடவுள்மனம் கல்லாகவே இருந்தது. எவ்வளவு துன்பப்பட்டாலும் துயரம் தீரவில்லை. எனவே மேல்கண்ட மதத்தலைவர்களின் சீர்திருத்தம் பசியிலும், துன்பத்திலும், ஆடை வீடு இல்லாமல் தவிக்கும்படியான கஷ்டத்திலும், நரகம் கடவுள் என்ற பயத்திலும் வந்ததை வாய் பேசாமல் அனுபவிக்கும்படியான அடிமைக்குணத்திலும் மக்களை வாழும்படி செய்துவிட்டது.

ஆனால் நம்முடைய சுயமரியாதை இயக்கமானது மக்கள் தன்மதிப்பை-தன்னுடையபிறப்புரிமையை-தான் காப்பாற்றி சுயமரியாதையை அடையவதிலும், மனிதர்கள்படும் கஷ்டநஷ்டங்களுக்குக் காரணம் மனிதர்கள்தானென்றும் பிறருடைய கஷ்டத்தைப் போக்கநம்மால் முடியுமென்றும்நம்படியான ஆண்மையின் நல்லெண்ணத்திலும், அனைவரும் ஒன்றெனவே கருதும்படியான சமரச சமத்துவ நோக்கத்திலும், நம்முடைய முயற்சியாலும் அனுதாபங்கொண்ட ஒத்துழைப்பினாலும்உலகத்தைச் சீர்திருத்தலாம் என்னும்படியான தன்னம்பிக்கைகொண்ட எண்ணத்திலும், தனது காரியங்களைப்பார்த்துக்கொள்ளவோ, தன்னுடைய கோட்பாடுகளை தனது அறிவிற்குகந்தவண்ணம் தான் வகுத்துக்கொள்ளவோ, தனது அறிவுக்கு உண்மையெனப் புலப்பட்ட ஒவ்வொன்றையும் தான் தடையறச் செய்துகொள்ளவோ, ஒருவனுக்கு உரிமை இருக்கிறதென்ற அறிவுள்ள சுதந்திரக் கொள்கையை அடையும் வழியிலும் உழைத்துவருகிறது.

நம்முடைய சீர்திருத்தம் இன்பமாக வாழ்ந்து துன்பத்தைப்போக்கிக்கொள்வது. ஏனெனில், துன்பம் துன்பத்தை போக்குவதென்பது காசியில் தற்கொலைசெய்துகொண்டாவது இறந்துபோனால் மோட்சம்கிடைக்குமென்ற எண்ணத்திற் கொப்பானது.

ஆகையால் எப்பொழுதும் மக்கள் பயம் என்பதை அறவே அகற்றி தனக்குவிளங்காததை நம்புவது என்கின்ற மூடநம்பிக்கையைவிட்டு, தன் அறிவைக்கொண்டு ஆண்மையுடன் ஆராய்ந்து உண்மையை அறியமுன்வருகின்றார்களோ அப்பொழுதுதான் அவர்கள் உண்மையாக முன்னேற்றமடைகிறார்கள். அப்பொழுதுதான் உண்மையான எண்ணங்களும் உயரிய நோக்கங்களும் மனிதனை ஆட்கொள்ளும். அப்பொழுததான் உலகம் உண்மையான இயற்கைவழியைப் பின்பற்றி மனித வாழ்க்கையின் முக்கியநோக்கமும் சீர்திருத்தத்தின் சிறப்பான முடிவுமாகிய உண்மையான மாசற்ற சுகமான சுதந்தர வாழ்க்கையை யடைய முடியும்.

மதுரை அறிஞர் சங்கம்

மேற்படிசங்கத்தின் வாராந்தர கூட்டமொன்று சென்ற ஞாயற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு மதுரை அடிசனல் செஷன் ஜட்ஜ் கனம் எஸ் ரெங்கசாமி அய்யங்கார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. கனம் எஸ் சோமசுந்தரபாரதி "குருநாட்டில் தர்மர்உரிமை" என்ற விஷயம்பற்றி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார் ஏராளமான கூட்டம் வந்திருந்தது.

உபந்நியாசகர் ஒன்றிரண்டு சந்தேகங்கள் எழ பாரதநூலைத் துருவிப்படிக்க லாயினரென்றும், துரோணர் முதலிய பெரியோர்களெல்லாம் பாரதப்போரில் கௌரவர்களுக்குத் துணைநின்றதும் துரியோதனன் மற்றெல்லாரிடத்தும் எல்லா விஷயங்களிலும் பெருந் தன்மையுடன் அறமும்உடையவனாக இருக்க பாண்டவர்பால்மட்டும் அறக்கொடியோனாக நடந்ததும் இச்சந்தேகங்களுக்கு அடிப்படையாகவிருந்தனவென்றும், பின் ஆராய்ச்சிசெய்யச்செய்யகிருஷ்ணன்தான் பாண்டவர்களுக்கு குருநாட்டை அடையஆசையையூட்டினனென்று தெளியக்கிடக்கிறதென்றும், அன்று முதல் இவ்வாசைகொண்ட பாண்டவர்களை கௌரவர்கள் ராஜத்துரோகிகளாகக் கொண்டும் இம்சைகள் செய்தனரென்றும், பின் சூதினில் தோத்திழந்து தஞ்சமற்ற பஞ்சையராய்த்தவிக்கும் போது, பன்னிருவருஷம்வனவாசமும்ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும் யேற்றுவருகவென்று சபையோர்சொல்லி பணிகொடியோன் பணியேற்று துச்சாதனன் எடுத்து சூதிற்பணயமாய் வைத்துப்பெற்றசொத்தேனும் பிறசொத்தேனும் தாம் ஒருநாளும் கொடுக்கமாட்டோமென்று முழங்கினனென்றும், கண்ணில்லாத்தந்தையும் அவரடிமையுற்ற தலைகளைய மட்டும் சம்மதிப்பதாகவும் கௌரவர்'கொண்டனகொடுத்தவரல்லார்" என்று பாண்டவருக்கு தம் பிள்ளைகள் குணம்கூறி அமைதியுடன் வழி அனுப்பினரென்றும்,பதிமூன்றுவருஷவனவாசத்திற்குப் பின் துரியோதனனிடம் நாடுகேட்கும் விஷயமாய் தர்மன் ஓர் சபைகூட்டி கிருஷ்ணனை துரியோதனனிடம் தூது அனுப்பிதம மனோருக்காக நாடுகேட்கவும்நாடுவிடில்பாதிகேட்கவும் அதுவும்தாரானெனில் ஐந்தூர்கேட்கவும் அதும் தாரவிடில் ஐந்தில்லம்கேட்கவும், அதுவும் மறுத்தால் அருபோர் கேட்கவும் வேண்டினனென்றும், தூது சொன்ன கிருஷ்ணனிடம் ஈபிருக்குமிட மும்தாரேனென்று துரியோதனன்பதில் உரைத்தானென்றும், பின்பாரதப் போர்விளைந்ததென்றும், தர்மர் மகாசூதாடியென்றும், பாரதப்போருக்கும் பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனாதிகளுக்கும் பகைமை ஏற்படுவதற்கும கிருஷ்ணனே காரணபூதனென்றும் ஆகையால் யெவ்விதத்திலும் பஞ்சபாண்டவர்களுக்கு குருநாட்டில் யெவ்வித பாத்தியதையும் இல்லையாமென்றும் பேசி முடித்தார்.

பின்னர் அநேகர் பேசியதின்மேல் அக்கிராசனர்முடிவுரையின் பேரில் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

கவிராஜ்.

பார்ப்பனீயம் ஒழிந்த திதி

அய்யம்பேட்டை மானோஜியப்பா சாவடியில் வியாபாரியும் சுயமரியாதைத் தொண்டருமாகிய, கோ. ராஜகோபால செட்டியார் அவர்கள் தமது தந்தையாரின் திதியை சமீபத்தில் பார்ப்பனீயம் ஒழித்து, சில ஏழைகளுக்கு அன்னமிட்டு நடத்திவைத்தார்.

ஒரு நிருபர்

மதம் மக்களை முன்னேறவிடுவதில்லை.

(ஸ்ரீதர சுவாமிகள் எழுதுவது)

ஒரு தேயம் முன்னேற்றமடையவேண்டுமானால் அத்தேயத்தில் வதியும் பற்பல சமூகங்கள் முன்னேறி இருத்தல்வேண்டும். நம் தேயத்தில் அநேக சமூகங்கள் இருக்கின்றன. சாதிப் பிரிவுகள் நம் தேயத்தில் உள்ளதுபோல் மற்ற எந்த தேசத்திலும் காணமுடியாது. இங்கு ஆள் விகிதம் ஒவ்வொரு ஜாதியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் மனித சமூகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களும் வளர்ச்சியடைய வேண்டும். இரண்டொரு அங்கங்கள் சுகமாகவும மற்றவை நோயுற்றும் இருந்தால் ஆச்சரீரம் ஆரோக்கியமுடையதென்று கூறமுடியாது. நம் தேயத்தில் பற்பல சமூகங்கள் இருக்கின்றன, இதில் இரண்டொரு சமூகங்கள்மட்டும் முன்னேற்றமடைந்திருக்கலாம். மற்ற சமூகங்கள் பாதாளத்தில் அழுந்திக் கிடக்கின்றன. இதற்குக் காரணம் மதமே அன்றி வேறல்ல.

மதத்தால் விளைந்த தீமைகள் அனந்தம். மதம் உடைக்கப்பட்டாலன்றி சன சமூகங்கள் முன்னேற்றமடைதலரிது. இந்து மதத்தில் ஒரே மனித சமூகம் எண்ணிறந்த ஜாதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது உயர்வு தாழ்வுகளும் கற்பிக்கப்பட்டுள்ளன. ஒருகூட்டத்தார்களுக்கே சகல உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது இதனால் மற்ற ஜன சமூகங்கள் முன்னேறுவதற்கில்லை. யுக்திக்கும், அனுபோகத்திற்கும், இயற்கைக்கும் மாறாக உள்ள மதங்கள் சுயநலமிகளால் சிருஷ்டிக்கப்பட்டவையாகும். இத்தகையமதங்கள்மக்களை பாழ்படுத்துகின்றன. மக்களின் சுதந்திர உணர்ச்சியை மதம் தடுத்துவிடுகிறது. மதம் மூட நம்பிக்கையில் மக்களை அழுத்திவிடுகிறது. பகுத்தறிவிற்கும் விசாரணைக்கும் மதம் இடந்தரவில்லை. மதாச்சாரியர்கள் சொலவதைக் கடவுள் வாக்காக நம்பவேண்டு மென்றுமதம் கட்டாயப்படுத்துகிறது. தவறினால் நரகத்துக் காளாகவேண்டுமென்று பயமுறுத்துகிறது. நூற்றுக்கு மூன்றுவீதமுள்ள பார்ப்பனர்களுக்கு எல்லா உரிமையுமுண்டு. நூற்றுக்குதொண்ணூற்றேழுவீதமுள்ளபெரிய ஜன சமூகத்துக்கு எவ்வித உரிமையுமில்லை. சொற்ப தொகையினரான பார்ப்பனர்கள் ஒரு பெரிய ஜன சமூகத்தை தங்கள் அடிமைகளாக கருதுகிறார்கள்.

மதத்தின் லக்ஷியம் மக்களைமோக்ஷமடையச்செய்வதென்கிறார்கள். மதத்தின் பெயரால் மக்கள் அடிமைக்குழியில் வீழ்ந்துகிடக்கிறார்கள். மதத்தில் எண்ணிறந்த கடவுள்களை சிருஷ்டி செய்துள்ளார்கள். மோக்ஷத்தைக் கொடுப்பவர் கடவுள் என்று கூறுகிறார்கள். கடவுளிடம் மக்கள் குறைகளை கூறவும் மோக்ஷத்தை வாங்கிக்கொடுக்கவும் பார்ப்பனர்கள் தரகர்களாய் இருக்கின்றனர். இத்தரகர்கள் கடவுள் பெயரையும் மோக்ஷத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு தங்கள் பிழைப்பிற்கு வழி தேடுகிறார்கள். தங்கள் சௌகரியங்களுக்கு தக்க வண்ணம் வேதமென்றும் சாஸ்திரங்களென்றும் எழுதிவைத்திருக்கின்றனர். வேதங்களை ஆராய பார்ப்பனரல்லாதார்க்கு உரிமையில்லை. ஆராய்ந்தால் தங்கள் குட்டு வெளிப்பட்டுவிடும்போலும். (வெள்ளைக்கார அரசாங்கத்தில் இக்குட்டு வெளிப்பட்டு விட்டது) ஒன்றுமறியாத பாமரமக்களை இப்புரட்டுகளை நம்பும்படி செய்துள்ளார்கள். ஏன், பெரியபண்டிதர்களும் இப்புரட்டுக்கு ஆளாகின்றனர்.

உலகில் இப்பண்டிதர்கள் எதை செய்கிறார்களோ அதை ஜனங்கள் பின் பற்றுகின்றார்கள். படித்தவர்களும், பண்டிதர்களும் உலகத்தை கெடுத்துவிட்டார்களென்றஒருபெரிய அபவாதம் உண்டு. இதை நிவர்த்திக்க பண்டிதர்கள் பிரயத்தனப்படுகிறார்களில்லை. சமத்துவம், சகோதரத்துவம், அன்பு, சத்தியம் முதலான உத்தமகுணங்களை கற்பிக்கக்கூடிய மதங்கள் தான் வேண்டற்பாலன. தர்க்க ஞாயங்கட்கு முன்னில்லாத புரட்டுக் கதைகளை எழுதியும், அதை பிரசங்கம் செய்தும் காலங்கழித்து ஜனங்களை அந்தகாரத்தில் வதியச்செய்யும் பண்டிதர்களால் உலகம் கெட்டுப்போவதல்லாமல் முன்னேற்றமடைவதெங்ஙனம்? பண்டிதர்கள் தங்கள் கடமையை உணருகிறார்களில்லை. குருக்களும் பண்டிதர்களும் ஜனங்களை மூட விஸ்வாசிகளாக செய்துவிட்டனர். ஜனங்களின் மூட நம்பிக்கையால் குருக்களும் பண்டிதர்களும் தங்கள் காரியங்களைசாதித்துக்கொள்கிறனர். இதை யாராவது எடுத்துக் கூறினால் அவர்களை நாஸ்திகர்கள் என்று தூற்றுகிறார்கள். படியாதவர்களென்றும் ஆராய்ச்சியற்றவர்களென்றும் பிதற்றுகின்றார்கள். மூடக்கொள்கைகளையும், புரட்டுக் கதைகளையும் படிப்பதாலும், போதிப்பதாலும் விளையப்போகும் நன்மையென்ன? ஏனையோர்களை மூடர்களாகவும் பிடிவாத முடையவர்களாகவும் செய்வதில் விசேஷ திறமையை அடையலாமேயன்றி வேறில்லை.

உலகில் எத்தனையோ சீர்திருத்தக்காரர்கள் தோன்றினார்கள். சீர்திருத்தக்காரர்கள் தோன்றும்போதெல்லாம் அவர்களை கொல்லவும், கவிழ்க்கவும் முயலப்பட்டன. மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்று கதறினார்கள்; கதறுகிறார்கள். எந்தசீர்திருத்தத்தையும் செய்யமதம்விரும்பவில்லை. என்னகெடுதிகள் நேரினும் திருத்தத்தை அனுமதிக்கவில்லை. இதனால் இந்து ஜனங்கள் நாசமடைகின்றார்கள். பால்மணம் மாறாத இளம் பெண் குழவிகளை மனைவிகளாகச் செய்ய மதம் போதிக்கின்றது. மனிதனை மனிதன் அடிமைப்படுத்த மதம் இடந்தருகிறது. எண்ணிறந்த ஜாதிப்பிரிவுகளை மதம் சம்மதிக்கின்றது. விலங்குகள் நடக்கும் பாதையில் சில மனிதர்கள் நடக்க மதம் அனுமதிக்கவில்லை. ஏழைகளின் பணத்தை செலவுசெய்து கட்டிய கோவில்களில் ஏழைகள் நுழைவதற்கில்லை. ஒரு கூட்டத்தார்களின் வயிறு நிறைந்தால் மற்றையோர்கள் மோக்ஷமடையலாமென்று மதம் கூறுகின்றது. எத்தகைய அக்ரமங்கள் செய்தாலும் பார்ப்பனனுக்கு பணம் கொடுத்தால் தீர்ந்துவிடுமென்றும் மதம் சொல்லுகிறது. எண்ணிறந்த ஸ்திரீ ஜனங்களை விதவைகளாக்கி முக்காடிட்டு மூலையில் கிடக்கும்படி மதம் உபதேசிக்கின்றது. பார்ப்பான் எல்லா ஜாதிப் பெண்களையும் புணரலாமென்று மதம் அனுமதிக்கின்றது. சூத்திரன் பார்ப்பனப் பெண்ணைப் புணர்ந்தால் சிரச்சேதம் செய்துவிடும்படி மதம் கட்டளையிடுகிறது. பார்ப்பனன் மற்றொருவனைக் கொலை செய்தால் தலைமயிரை மொட்டையடித்தால் போதுமென்று மதம் கூறுகிறது. ஒரு பார்ப்பனன் ஓரிரவு ஓரிடத்தில் சும்மா படுத்திருப்பானாகில் அவ்வூருக்கே நாசம் வந்துவிடுமென்று மதம் கூறுகிறது. தனியே படுக்கும் பார்ப்பனனுடன் ஒருபெண்ணை படுக்கவைத்தால் மோக்ஷம் கிட்டுமென்று மதம் முறையிடுகின்றது. கடவுளைப் பூஜிக்க பார்ப்பனர்கள் தான் உரிமையாளர்களென்று மதம் சொல்லுகிறது. இன்னும் எண்ணிலடங்கா தீமைகட்கு பொக்கிஷமாயிருக்கும் மதப்புரட்டுகளை நம்பி ஜனங்கள் மோசமடைந்தார்கள்.

இவ்வளவு கொடுமைகளும் மதத்தால் விளைந்த கொடுமையாகும். இதையெல்லாம் கடவுள் வாக்கென்று சொல்லப்படுகிறது. மோசககாரர்கள் மக்களை வஞ்சித்தார்கள். மோசக்காரர்களின் புரட்டுகளை எடுத்துக்காட்டும் உத்தமர்களை நாஸ்திகம் என்ற பூச்சாண்டியைக் காட்டி மிரட்டிவிடலாமென்று கருதுகிறார்கள். உலகம் கொஞ்சங் கொஞ்சமாக உண்மையை உணர்ந்து வருகிறது. இனி இப்பூச்சாண்டிகளுக்கு யாரும் பயப்படமாட்டார்கள். படித்தவர்கள் என்போர்களாலும் உலகிற்கு அநேக இடுக்கண்விளைந்ததுண்டு. படித்தகூட்டத்திற்சேர்ந்தஒருவரும் சுயராஜ்ஜிய கக்ஷித்தலைவருமாகியஒரு "பெரியார்" பெண்களுக்குபொட்டுக்கட்டுதல் அவசியமென்றும், அதை நீக்கினால் மதத்திற்கு அழிவு வந்துவிடுமென்றும் சொல்லுகிறார். விபசாரத் தடை மசோதாவிற்கு எதிரிடையாகவும் கிளம்புகிறார்.

இப்பொழுது, பால்யவிவாகம் மதசம்மந்தமானதென்றும், அதைநீக்க சட்டம்செய்தல் கூடாதென்றும் கூறுகின்றார். இதற்கு ஆதாரமாக பராசர்ஸ்மிருதியையும்காட்டுகின்றார். இதனால் படித்தவர்களால் ஜன சமூகத்திற்கு விளையும் இன்னல்களை இப்பெரியார் மெய்ப்பித்துள்ளார். இந்துக்களுக்கு மனுஸ்மிருதியும் ஆதாரமாயிருக்கின்றது. இங்கிலையில் சுயராஜ்ஜியம் கேட்கப்படுகிறது. சுயராஜ்ஜியம் கிடைத்தால் எந்த ராஜ்ஜியம் வருமென்பதை நேயர்கள் உன்னி நோக்குவார்களாக. ஆங்கிலேய ராஜ்யத்தில் நாம் சற்று ஆறுதல் அடைந்திருக்கிறோமென்று கூறுவது மிகையாகாது. சுயராஜ்யம் கேட்பவர்கள் பாராசர் ஸ்மிருதியை வலியுறுத்துகின்றார்கள். ஆபாசமான ஆதாரங்களை அஸ்திவாரமாகக்கொண்ட மதத்தால் மக்கள் முன்னேற்றமடைய முடியாது. மதத்திலுள்ள ஆபாசங்களை திருத்த வேண்டும். சமூகாய பிரதிநிதித்துவம் ஏற்பட வேண்டும். சமூக முன்

இதன்தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

'இந்திய மாதா'

—0—

(திரு அய்யாமுத்து எழுதுகிறார்.)

5-ஆம் கட்டுரை.

புருஷனே தெய்வம்,

இந்தியாவைச் சுற்றிச் சென்ற ஸ்ரீமதி மேயோ- பெண்ணினமாகையால், இவர் தம் 'இந்தியமாதாவில்' பெண்களின் கேவல நிலையைப்பற்றி வெகுவாகக் கூறியிருத்தல் ஆச்சரியமல்ல. இந்தியமாதர்களை இழிவு படுத்தியது இப்படியோதென பல "திலகர்கள்" கர்ஜித்தார்கள். ஆனால் அவர்களுக்கு நான் சொல்லவுள்ளதென்னவெனில்' உங்கள் மாதர்களை எவ்வளவு தூரம் இழிவுபடுத்த முடியுமோ அவ்வளவு தூரம் உங்கள் புராணங்களும் மற்ற கிரந்தங்களுமே இழிவாகக் கூறியிருக்கின்றன. இதைவிட இனியும் கேவலமாகக் கூறுதற்குவேண்டிய விஷயமும், பதமும் உலகத்தில் வேறெங்குமில்லை" என்பதே எமதபிப்பிராயமாகும்,

பத்ம புராணத்திலே மனைவி கணவனுக்குச் செய்யவேண்டிய கடமை கூறப்பட்டிருக்கிறது. இதை அமெரிக்க மாது தனது புத்தகத்தில் எடுத்தாண்டுள்ளார். அதாவது:—

'புருஷனைத் தவிர பெண்ணுக்கு வேறு தெய்வமில்லை. அவனுக்கு தான் பணிந்து, அவன் காலாலிட்ட வேலையை கையாலேற்றுச் செய்து முடிப்பதே மனைவியின் கடமையாகும். அதுவே அவளுடைய வாழ்வின் லட்சியமாகும்."

"புருஷன் சூதாடியாயிருப்பினும் சரி, ஊரிலுள்ள பெண்களுடன் நேசம் வைத்திருப்பவனாயினும் சரி, வீட்டிலுள்ள மனைவியைக் கண்ணால்கூட பார்க்க விருப்பமில்லாதவனாயினும் சரி, மூர்க்கனாயிருந்தாலும் சரி, இன்னும் எடுத்துரைக்க இயலாத குற்றங்கள் புரிந்தாலும் சரி, அதையெல்லாம் சற்றும் பொருட்படுத்தாது, மனைவி அவனையே தெய்வமெனக் கருதி அவனுக்குப் பணிவிடை செய்வதைவிட தனக்கு வேறு கடமையில்லையென எண்ணி, தான் ஊண் உறக்கமின்றி வாடினாலும் அவன் மனம் கோணாது, அவனைத் திருப்திப்படுத்துவதே தனது முக்கிய வேலை யென எண்ணி வாழவேண்டும்."

'புருஷன் உண்டபின்பே மனைவி உண்ணவேண்டும். புருஷன் பட்டினியாக இருந்தால் தானும் பட்டினியாக இருக்கவேண்டும். அவனுக்கு வந்த கவலை தன்னுடைய தென எண்ணவேண்டும். புருஷன் இறந்துவிடுவானாகில், அவனுடன் தானும் உடன்கட்டை ஏறவேண்டும். அவ்விதம் செய்தால்தான் அவளை உலகத்தார் மெச்சுவார்கள்."

"புருஷன் பாடுவானாகில் மனைவி அதைக் கண்டு மகிழ்ச்சியுறவேண்டும். தன் புருஷனை விட உலகில் அறிவாளி வேறெவருமில்லை யென மனைவி எண்ணவேண்டும்."

"மனைவி வீட்டில் யாதொரு கலகத்தையும் உண்டுபண்ணக் கூடாது. புருஷன் மனைவியை விடுத்து வேறு பெண்ணிடம் வியபசாரம் செய்வதற்காக, அவள் புருஷனிடம் அருவருப்புக் கொள்ளுதல் கூடாது. வீட்டிலுள்ள தொந்தரவு பொறுக்கமாட்டாதவளாய் வீட்டை விட்டு வெளியில் போய்விடுவாளாயின், அவளை உலகத்தார் அதிகமாகத் தல் பழி[illegible]கள்,"

"புருஷன் மனைவியை அடித்துத் துன்புறுத்துவானாயின், பதிலொன்றும் பேசாது மிகப் பொறுமையுடனே இருக்கவேண்டும். சுருக்கச் சொல்லின் புருஷனை ஒவ்வொரு விதத்திலும் தெய்வமென்றே மதித்து ஒழுகல் வேண்டும். அவ்விதம் செய்வாளாயின் அவளை உலகம் புகழும்."

இந்த பத்ம புராணத்தை மேல் நாட்டார் படித்து நமது நாகரீகத்தை எங்ஙனம் மெச்சுவார்கள்! இக் கடுமையான சட்டமுள்ள நாட்டில் எவர்தான் பெண்ணாய்ப் பிறக்கவும் மணமுடித்து வாழவும் இசைவர்? எனினும் இதுவல்லவோ ஒரு எழுத்துக் கூடத் தவறாமல், நமது பெண்களுக்கு அவர்கள் குழந்தைப் போழ்திலிருந்தே பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இதுவல்லவோ நமது பெண்களின் ரத்தத்தில் ஊறிப்போய்க் கிடக்கிறது, பெண்களை வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும், பணியாளாகவுமன்றோ இந்தியக் கணவன் நடாத்துகிறான். இந்த நிலைமை பெண்களுக்குச் சரியான கல்வியறிவு இல்லாத காரணத்தாலன்றோ ஏற்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி நமது மேயோ கூறுவதாவது: "புருஷன் வீட்டுக்குச்செல்லுமுன் பெண் அதிகமாகக் கல்வி கற்றிருக்கமுடியாது. சென்றபின் கல்விகற்பதற்குப் போதிய சாவகாசமில்லை. அவளுடைய கல்வி வளர்ச்சியில் சிரத்தை எடுத்துக் கொள்வாருமில்லை. ஆனால் புருஷன் வீட்டில் அவள் இரண்டே விஷயங்களைக் கற்றுக் கொள்கிறாள். புருஷனுக்குத் தான் செய்யவேண்டிய ஊழியம் என்னவென்பது ஒன்று, வீரன், இருளன், காட்டேரி, சாமுண்டி, வெறியன், தொண்டி, தூறி, தொண்டி, நல்லண்ணன், மாடன், கருப்பன், பாவாடை, காளி, கருப்பாயி முதலிய சில தெய்வங்களை வணங்குவது எப்படி? அவைகளுக்குப் பூசை போடுவது எப்படி என்பது மற்றொன்று!"

இந்த வர்ணனையில் என்ன குற்றமிருக்கிறது? பெண்கள் தங்கள் கடமை இதுவன்றி வேறென்னவாகத்தான் இந் நாட்டில் பூண்டு வாழ்கின்றனர்? இது அவர்களுக்குச் சரியான கல்வி யில்லாத குறைபாலன்றோ ஏற்பட்டிருக்கும் நிலைமை!

மாமிகள் கொடுமை. இதைப்பற்றி இந் நாட்டில் எத்தனையோ மலிவான புத்தகங்கள் இருக்கின்றன. மேயோ கூறுவதாவது; 'இந்துக்களுடைய வைதீகச்சட்டப்படி, ஒரு பெண் தன்னுடைய மாமியிடம் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் அவளுக்குத்தான் செய்யவேண்டியகடமை என்னவென்பதையும் கூறுகின்றது. ஒருபெண்ணுக்கு விவாகமாகி தன் புருஷனுடையவீட்டிற்குச் செல்லுவாளாகில் அவளை உடனே வீட்டு வேலைக்காரியாகவேமாமியார் கருதுகின்றாள், மாமியாரிட்டவேலைகளை மருமகள் தவறாமல் செய்து முடித்தல் வேண்டும். மாமியார் நாத்திமார் இவர்கள் இருவரின் வேலைகளைச் சிறிதும் தயக்கமற யாதொரு மறுமொழியும் கூறாது மருமகள் செய்து முடிக்கவேண்டும். மருமகளுக்குச் சிறிதுகூட சுதந்திரமென்பது கிடையாது. வீட்டிலுள்ள மாமி புருஷன் முதலியவர்கள் அவளுக்குச் சுதந்திரம் கொடுப்பதில்லை என்பது ஒரு புறமிருக்க, சுதந்திர உணர்ச்சியே பெண்ணிடம் தோன்றுவதில்லை. உழைப்பதே அவள் கடமை, வீட்டிலுள்ளவர்கள் மனங் கோணாமல் நடந்து கொள்வதே அவள் லட்சியம். சிறுவயதிலிருந்தே இதே எண்ணத்துடன் வாழ்ந்து வந்திருக்கும் ஒரு பெண்ணிடம் சுதந்திர உணர்ச்சி எவ்வாறு எழும்? எழுவதற்கு நியாயமுமில்லை. மாமியாரோ மருமகளிடம் சிறிதுகூட இரக்கம் வைப்பதில்லை, அவளை மிகவும் கொடுமையாகவே நடத்துவது வழக்கம். அதிலும் மருமகள் குழந்தை பெறாவிட்டால் மாமியாளிடம் அவள் படும் பாட்டை எடுத்துரைக்க முடியாது- அப்படியே மருமகள் குழந்தைகளைப் பெற்று அவைகள் பெண் குழந்தைகளாகப் போய்விடுமாயின் மாமியாருக்கு வரும் கோபத்துக்கு அளவு கிடையாது- அவளை அடித்துத் துன்புறுத்தவும் செய்வாள்- அவளைத் தள்ளி வைத்துவிட்டு தன் மகனுக்கு வேறொரு விவாகம் செய்து விடுவதாகப் பயமுறுத்துவாள்.'

உள்ளதை உள்ளவாறு இம்மாது எடுத்துக் கூறியிருக்கிறார். இந்நிலைமையையாரே மறுக்கவல்லவர்? இதைப் போக்க நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் பெண்கள் குருடனுக்குக் குருடன் வழிகாட்டியது போலல்லவா வாழ்ந்து வருகின்றனர்- அவர்கள் அறிவு வளர்ச்சிக்கான கல்விச் சாலைகள் எங்கே? கிராமங்கள் தோறும் கல்விச்சாலைகள் அமைத்தல் அவசியமாய்த் தோன்றவில்லையா? "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று சொன்னார் ஔவைப்பிராட்டியார்- இக் கோவில்களால் தான் உங்கள் நாடு இவ்வளவு கேவல நிலைக்கு வந்துளது- இதைப்பற்றிவிரிக்கிற் பெருகும்- உங்கள் கோவில்களைப் பெண்கள் கல்விச் சாலைகளாக உடனே மாற்றுங்கள்- உங்கள் கோவில் மான்யங்களைப் பெண்கள் கல்விக்காக விற்று உபயோகியுங்கள்- உங்கள் பூசை உற்சவங்களை நிறுத்தி பெண் கல்வியில் அப்பணத்தை செலவு செய்யுங்கள் கல்விச்சாலையில்லா ஊரைவிட்டகலுங்கள்- அன்றே பெண்கள் விடுதலை பெற்ற நாளாகும்- அன்றே பெண்கள் சோதி ரூபம் கொள்வார்கள்- அன்றே மேயோ போன்ற பிற நாட்டுப் பெண்கள் நமது தாய்மார்களைக் கண்டு வணங்குவார்கள்- இதுவின்றி "எங்கள் ஔவையைப்பார்! அசலாம்பிகையைப்பார்! லட்சுமியைப்பார் சாஸ்வதியைப் பார்! சரோஜினியைப்பார்! சாரளா தேவியைப் பார்! கஸ்தூரி பாய் காந்தியைப்பார்" என்று கூறிவிட்டு வாளா கிடப்பீர்களாயின் உங்கள் நாடு பேதைகள் பிறக்கும் நாடாய்த் தீரும். ஆதலால் நீங்கள் நாள்தோறும் கல்லை வணங்குவதில் செலவிடும் பணத்தையும் [illegible] பெண்கள் அறிவுவளர்ச்சிக்காக உபயோகப்படுத்துங்கள். உள்ள நிலையை உள்ளவாறு எடுத்துரைத்த மேயோவுக்கு வந்தனஞ் செலுத்தி விரைவில் முன்னேற இதுவே தருணம்.

"சந்தோஷிக்கத்தக்கதன்றே?

(கே, நாராயண செட்டி)

தன்னலங்கருதி எத்தனை வகைகளில் எவ்வளவுக் கெவ்வளவு தாழ்த்த முடியுமோ அத்தனை வகைகளில் அவ்வளவுக்கவ்வளவு பார்ப்பனர் சாத்திரத்தாலேயும் அநுட்டானத்தாலேயும் நமது பெண்களை தாழ்த்துவதோடு நம்மவர் பாலும் அக்கொள்கையைப் பரப்பினார்கள். அவ்வாறு பார்ப்பனர்கள் தம் பெண்களுக்கு இழைத்திருக்கும் இடுக்கண்களிலேயும் நம் பெண்களுக்கு அவர்கள் போதனையால் நாம் இழைத்திருக்கும் இடுக்கண்களிலேயும் மிகக் கொடுமையானது புருடன் இறந்ததும் பெண்களின் தலையை மொட்டையாக்கச் செய்தலும் வெள்ளைப் புடவையுடுக்கச் செய்தலுமே யாகும். "வைதவ்யத்தை யடைந்த பெண்கள் கூந்தலுடனும் அழகிய வர்ணப்புடவைகளுடனும் இருந்தால் எவரேனும் அவர் இச்சிப்பார்களாதலின், அத்தகைய அழகுகளை ஒழித்தல் அவசிய" மென்றும் கூசாமல் இவ்வழக்கத்தை மேற்கொண்டவர்கள் கூறுகிறார்கள். அவ்விதவைகள் உடலையும் ஒடுக்க வேண்டுமென்றும் ஒருவேளை ஆகாரமே உண்ண வேண்டுமென்றும் சாத்திரத்தில் விதித்திருப்பதாக சாத்திரம் எழுதும் சாதியாரென்போர் சாதிக்கின்றார்கள். விதவைப் பெண்ணின் அங்கங்களில் சிலவற்றைத் தறித்து விட வேண்டுமென்று விதிக்காதது சாத்திரக்காரர்களின் காருண்யமாகும். மிக்க

பம்பாயிக்கடுத்த டாடாரிலிருக்கும் ஸ்ரீமான் ஆர் கிருஷ்ணய்யர் என்பார் 19-7-28-ல் வெளிவந்த "ஹிந்து" பத்திரிகையில் "Social Reform in India" (இந்தியாவில் சமூக சீர்திருத்தம்) என்ற தலைப்பின் கீழ் "வயது க்ரமத்தைக் கூட கவனியாமல் விதவைகளை முண்டனம் செய்விக்கும் கொடிய வழக்கம் தென்னிந்தியாவில் பிராமணர்களுக்குள்ளும் மகாராஷ்ட்ர தேசத்தில் கவுடப் பிராமணர்களுக்குள்ளுந்தான் இருக்கிறது; தென்னிந்தியாவில் தெலுங்குப் பார்ப்பனர்கள் விதவைகளை முண்டனஞ் செய்யும் கோஷ்டியாருடன் சேரவில்லை. இந்த க்ரூரமான வழக்கத்துக்கு ஏதேனுஞ் சாஸ்திரத்தில் ஆதாரமிருக்கின்றதா? இது முன்னோர்கள் நாள் முதல் பரம்பரையாக அநுஷ்டிக்கப்பட்டு வருவதைத் தவிர, தகுந்த ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை." என்று எழுதியிருக்கின்றார்.

இது விஷயம் தெரிந்தோ தெரியாமலோ சில தென்னாட்டு வடகலைப் பார்ப்பனர் தம் விதவைகளுக்கு தலைமயிரை நீக்குவிக்காமலும் வெள்ளை உடை உடுவிக்காமலும் சுதந்தரத்திலே விட்டிருப்பது சந்தோஷிக்கத்தக்கதேயன்றோ? இவ்வாறே பார்ப்பனர்களெல்லாம் ஷடி ஐயரவர்கள் கருத்தையங்கீகரித்து காலத்தையறிந்து தக்கதிது தகாததிது என்று ஆராய்ந்து செய்தால் பொதுவாக பெண்களுக்கும் சிறப்பாக பார்ப்பனிகளுக்கும் கோமுட்டி ஸ்திரீகளுக்கும் இவ்விஷயத்தில் நியாயம் செய்வதாகுமென்று எண்ணுகின்றேன். விதவைகளின் தலைமயிரை நீக்கும் கொடிய வழக்கமுள்ள அனைவரும் பெண்கள் முன்னேற்றத்திற்குரிய துறைகளிலே தலையிட்டு நன்மை பெறச் செய்ய வேண்டுமாய்க் கோருகிறேன்.

மலேயா சகோதரர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

ஐயன்மீர்! பார்ப்பனர்கள் தங்கட்குச் சாதகமானவற்றை முனிவர்கள் வாக்கென்றும் இருடிகள் அருளியதென்றும் கடவுளால் மக்கட்கு செய்யப்பட்டதென்றும் கூறி, புராணங்களென்றும், இதிகாசங்களென்றும் பல பெயரிட்டு எழுதி வைத்திருக்கும் புரட்டுத்தனத்தையும் யோக்கியமற்ற கட்டுக்கதைகளையும் யாவர்க்கும் புலனாகும்படி தக்க ஆதாரங்களுடன் இடித்துக்கூறி; இக் "குடி அரசு" "திராவிடன்" முதலிய பத்திரிகைகள் மூலமும் சொற்பெருக்குகள் மூலமும் தமிழ்நாட்டிற்கு புது உணர்ச்சியை ஊட்டி, மூடநம்பிக்கையை புரோகிதப் பேயையும் புரோகிதச் சனியனையும் கட்டைவிட்டுத் துரத்தி, அதனுல் கொள்ளைபோகும் பொருள்களையும் சுயமரியாதையையுங் காப்பாற்ற பல அறிவாளிகள் தங்கள் உயிரைத் திரணமென உன்னிபாடுபட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அப்படியிருக்க ஒரு பார்ப்பனப் புரோகிதக் குடும்பத்தை தமிழர்களுக்குச் சொந்தமான பொதுஸ்தலத்தில் [illegible] பார்ப்பன தாசர்களின் தூண்டுதலின் பேரில் கூட்டிவந்து இருக்கச்செய்து அக்குடும்பத்திற்குவேண்டிய வசதிகள் புரிந்து வருவதுமன்றி அப்பார்ப்பனர்கள் தங்களைப் பிராமணரென்றும் மற்றவர்களை சூத்திரர்கள் என்றும் சொல்லவும் ஏழைகளை வஞ்சித்துப் பொருள் பறித்துத் திரியவும் இடங்கொடுப்பது சுயமரியாதை உள்ளவர்களுக்குச் சிறிதும் பொருத்தமான தாகாது.

பார்ப்பனப் புரோகிதத்தின் மோசத்தை உணர்ந்து அம்மாயவலையில் சிக்காமல் விலகிநிற்கும் மக்களை மேற்சொன்ன புரோகிதரை கூட்டிவந்துதான் கலியாணம் முதல் மற்ற சடங்குகள் யாவும் நடத்தவேண்டுமென்றும் அப்படிச்செய்யாவிட்டால் ஜாதிப்பிரஷ்டம் செய்துவிடுவோமென்றும் (குடியே முழுகிப்போய்விடும்) சொல்லிப் பூச்சாண்டி பிடிக்கப்பார்ப்பது தமிழர்களை முன்னுக்கு கொண்டுவருவதற்கு அடையாளமாவெனக் கேட்கின்றேன்.

தாங்களே அதற்கு ஆதரவளிப்பதோடு தொலையாமல் பிறரையும் சிபார்சுசெய்து வருவதால் இவர்களுக்குள் ஏதோ ரகசியம் மறைந்து கிடக்கிறது என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. சாம்பல் பூச்சையும் ருத்ராட்சக் கொட்டைகளையும் பார்த்துமோசம்போன காலம் மலையேறிவிட்டதென இவர்களுக்கு மிகவும் வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சுயமரியாதைத்தொண்டர்
எஸ். வி. ஆர். பினங்கு

அர்ச்சகப் பார்ப்பனர்களின் அக்கிரமம்.

சென்ற சனிக்கிழமை நானும் என் நண்பர்கள் பலரும் அபிஷேகம் செய்வதற்காக ஏராளமான பழம் தேங்காய் கற்பூரம் முதலிய அபிஷேக சாமான்களுடன் மதுரை மீனாக்ஷி ஆலயத்திற்குச்சென்றோம். முதல் வாசல்படி அண்டை ஓர் பார்ப்பன அர்ச்சகன் ஓடி வந்து "ஐயா என்னிடம் கொடுங்கள் நான் சாஸ்திரோக்தமாய் அபிஷேகம் செய்து தருகிறேன்" என்று சொன்னதின் பேரில் நான் "உன்னிடம் கொடுத்து அபிஷேகம் செய்ய எங்களுக்கு விருப்பமில்லை, நாங்களே உள்ளே போய் அபிஷேகம் செய்து கொள்ளுவோம்; எங்கள் அபிஷேகத்தை சுவாமி ஏற்றுக் கொள்ளும்" என்று சொன்னேன். அதற்கு அப்பார்ப்பான் "அடபாவிகளா பிராமணாளுக்குக் கொடுக்காதவைகளில் மறுஜன்மத்தில் குஷ்டரோகம் உண்டாகும்" என்று வாய் கூசாமல் பிரசங்க மழை பொழிய வாரம்பித்து விட்டான். பின்பு இந்த மஹானுபாவனை லக்ஷியம் செய்யாமல் என் சிநேகிதர்களைக் கூட்டிக்கொண்டு இரண்டாம வாசல் படியை அடைந்தோம் அவ்விடத்தில் சுமார் 15 பேர்கள் கும்பலாகக் கூடிக் கொண்டு "என்னிடம் கொடுங்கள் என்னிடம் கொடுங்கள் அபிஷேகத்தட்டை" என்று இழுத்தார்கள் "இதென்னடா சனியனாக இருக்கிறது நம்மால் இந்த அர்ச்சகர்களுக்குள் பெரிய கலகம் நடந்து விடுமென்று நினைத்து "ஒருவரிடமும் கொடுத்து அபிஷேகம் செய்து கொள்ள எங்களுக்கு விருப்பமில்லையாதலால் மரியாதை வேண்டுமானுல் இவ்விடத்தை விட்டு நகர்ந்து விடுங்கள்; தொந்தரவு செய்யாதீர்கள்" என்று எச்சரிக்கை செய்ததின் பேரில் கொஞ்சம் விலகி நின்றார்கள். பிறகு நாங்கள் மடமட வென்று நுழைந்து அம்மன் கோவில் சந்நிதிக்கே போய்விட்டோம். அவ்விடமிருந்த கோவில் அர்ச்சகன் "தேங்காய் ஒன்றுக்கு கணக்குப்படி 6 பைசாவும் பழம் விபூதி குங்குமம் இவைகளுக்கு ரூபாய் 1-8-0ம் ஆகிறது; உன்னுடைய பேர் ராசிக்கு மந்திரம் சொல்லி அபிஷேகம் செய்ய வேண்டியிருந்தால் அதற்கு 12 அணாவும் ஆக ரூ 2—4—0 ஆகும்". என்று சொன்னான்-நான் "என்னய்யா! ஒரு நிமிஷ வேலைக்கு 2-4-0 ரூபாய் கேட்கிறீரே, இது உனக்கு நியாயமா? நாங்களே அபிஷேகம் செய்து கொள்ள எங்களுக்குத் தெரியுமென்றோம்" அதற்கு அர்ச்சகபூபதி இப்படி பிராமணர்களுக்கு கேட்டதை கொடாவிடில் ஸ்ரீ மீனாக்ஷியம்மனுக்கு உங்கள் பேரில் எப்படி கிருபை உண்டாகும்? நீங்கள் பிரபுக்கள் இப்படி 2-4-0 ரூபாயிக்கு லோபித்தனஞ்செய்யக்கூடாது" என்று வாயில் உள்ள பற்களெல்லாம் தெரியும்படி கெஞ்சினான்- நாங்கள் ஷடி யார் வார்த்தைக்கு செவிகொடாமல் தேங்காய் பழங்களை கொண்டு வந்து அபிஷேகம் செய்யாமல் ஏழைமக்கள் அரும்பசியைத்தீர்த்தோம்.

ஏ. சுருளிவேலு.
ஜக்கமநாயக்கன்பட்டி.

ஓர் பார்ப்பன உபாத்தியாயர் யோக்யதை

கோவில்பட்டி தாலூக்கா காளாம்பட்டி கிராமத்தில் சுமார் ஒரு வருஷமாக ஒரு உபாத்தியாயர் பள்ளிக்கூடம் நடத்துவதுடன் மந்திரம், மாயம், பில்லி, சூன்யம் என்று பூஜை செய்வதாக தன்னுடைய உபாத்தியாயர் வரும்படியிலிருந்து சக்கரங்களும் தகடுகளும் செய்து வைத்துக்கொண்டு அவ்வூரிலுள்ளவர்களை ஏமாற்றி வயிறு பிழைத்துக் கொண்டிருந்தார். ஒருநாள் தான் பேய்களை ஓட்டுவதில் மகா நிபுணன் என்பதாக சில பெண்களை நம்பும்படி செய்து சில பெண்களிடம் தனிப்பட்ட நேரங்களில் தன்னுடைய விஷமத்தனத்தைகாட்டியிருக்கிறார். உடனே, இதுவரையும் இவர்செய்த பொய்பூசையினுடைய யோக்கியதை வெளியாகி தக்க மரியாதை செய்யப்பட்டு துரத்தப்பட்டார். போனவர் ஒரு வாரம் கழித்து வந்து "எனக்கு சமீபத்தில் கிறுணி வரும், வந்தவுடன் போய்விடுகிறேன்" என்று ஜாலஞ்செய்தார், அதற்கு சிலர் "இன்றே வெளியே போய் விடவேண்டும்; இல்லை பழைய மரியாதைதான் கிடைக்கும்" என்றார்கள். பார்த்தார் 'பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு" என்ற பழமொழிக்கிணங்க பள்ளிக்கூடம் போட்டுவிட்டு "தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்" என்பதாக ஓடிவிட்டார். நேயர்களே இனியாகிலும் மேற்படி குற்றங்களில்லாத, உபாத்திமைத் தொழிலில் தேர்ந்த, நல்ல நடையுள்ள ஒருவரை கூடியசீக்கிரம் உபாத்தியாயராக தெரிந்தெடுத்து பள்ளிக்கூடத்தை செவ்வனே நடைபெறும்படி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்,

உண்மையுரைப்போன்.

இசைவேளாள இளைஞர்கள் மகாநாடு

சிதம்பரம் இசைவேளாள இளைஞர்கள் மகாநாடு கோவை பிரம்மஸ்ரீ நாராயணபாகவதர் அவர்களின் தலைமையின்கீழ் வீரராகவ நாயக்கன் வீதி 2, 23, நெ. கட்டிடத்தில் கூடியது.

பண்ருட்டி ஸ்ரீமான் எஸ் எ தேவநாயக அய்யா அவர்கள், பிறப்பினாலும் தொழிலினாலும் ஒருவன் குறைந்தவனாகமாட்டானென்றும் அவனை அவ்வாறு கருதுவது பெரிய பாபமென்றும் சீர்குலைந்திருக்கும் சங்கீதத்தை சீர்திருத்தவேண்டுமென்றும் இலவச கல்வி யறிவை இளைஞர்களுக்கு அளிக்க வேண்டுமென்றும் பேசினார். பின்னர் சங்கீதம் ஸ்ரீமான் செல்வரத்தினம் பிள்ளை சமூகத்திலுள்ள பல குறைகளை எடுத்துக்கூறி அவற்றை சீர்திருத்தவேண்டியது இளைஞர்கள் கடமையென்றும் பொட்டுகட்டும்வழக்கத்தை அறவே விட்டுவிட வேண்டுமென்றும் பேசியபிறகு தலைவர்முடிவுரையுடன் வந்தனோபசாரம் கூறப்பட்டு மாலை 6-மணிக்கு கூட்டம் கலைந்தது. மீண்டும் 22-10-28-ல் கூடி இன்னுஞ்சில விஷயங்கள் முடிவு செய்யப்பட்டன.

மீ.க. ராமசாமி ராஜா, சங்ககாரியதரிசி.

மேல்ஒலக்கூர் போஸ்டாபீஸ் நிர்வாகமும் பார்ப்பன சூழ்ச்சியும்

அருகாமையிலுள்ள வீரணாமூருக்கு செவ்வாய் வியாழம் சனி ஆக மூன்று நாள் தபால் பட்டுவாடா செய்யவேண்டிய முறை இருந்தும் நமது நண்பர்களுக்கு பத்திரிகை சரிவர வந்து சேருவதில்லை. புரட்டாசி 22, 29 ஆம்தேதி 'குடி அரசு' பத்திரிகை ஒரு வாரம்வரையில் வராமலிருந்து பிறகு நமது நண்பர்கள் சிலர் அவ்வூர் போனபோது அவர்களிடம் எடுத்து கொடுத்தனுப்பி விட்டார்கள். இன்னும் அநேக வி. பி, இருப்பதாக நமது நண்பர் தெரிவித்தும் இன்னும் அவைகள் வந்து சேரவில்லை. இந்தச் சங்கடங்களை முன்னிட்டு நமது நண்பரும் சமூகவிளக்க சபைத் தலைவருமான ஸ்ரீமான் வி. எஸ். தேவசந்திரராவ் நயினாரவர்கள் வீரணாமூரில் போஸ்டாபீஸ் ஏற்படுத்த வேண்டி அநேக முயற்சிகள் செய்தும் எல்லாவற்றையும் பார்ப்பனர்கள் சூழ்ச்சிசெய்து தலையெடுக்கவொட்டாமல் நசுக்கிவிட்டார்கள். நமது நயினாரவர்கள் தாலூக்காபோர்டு எலக்ஷனில் மெம்பராக நின்ற அப் பார்ப்பனருக்குத் நமது முழுபலத்தையும் உபயோகித்து உதவி செய்தும் அந் நன்றியைச் சிறிதும் கருதாமல் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்துவிட்டார்கள். என்னே இவர்களின் நன்றி கெட்டதன்மை!

சமூகவிளக்க சபைத் தொண்டன்,

துறையூர் இளைஞர் சுயமரியாதை சங்கம்

சென்ற 29-10-28 மாலை 5மணிக்கு சர்வமதசமரச இராப்பாடசாலையில் தோழர் சிங்காரவேலு தலைமையில் கூட்டப்பட்டது. சங்கத்தின் மெம்பர்களும் ஏனையோர்களும் குழுமியிருந்தார்கள்.

1 காரியதரிசியாக திரு எஸ் ராமசாமியும் பொக்கிஷதாரராகத் திரு வி குமாரசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

2 சங்கத்திற்கு திராவிடன், ரிவோல்ட், குடிஅரசு, தமிழன், ஆகிய பத்திரிகைகள் வரவழைக்க காரியதரிசிக்கு அதிகாரமளிக்கப் பட்டது.

3 சுயமரியாதையியக்க பிரசாரத்திற்கு, திருவாளர்கள் எம் அப்பீமகமது, எஸ் ராமசாமி, எம. சிங்காரவேலு, வி குமாரசாமி, எம். பெருமாள், எஸ் கெங்காதரன், ஆகிய 6 பேர் களடங்கிய கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

4 நமது நகருக்கு பிரசாரம்செய்ய வருமாறு திருவாளர்கள் சாமிசிதம்பரனார், எஸ் வி லிங்கம, பட்டுக்கோட்டை அழகர்சாமி, கண்ணப்பர் முதலிய தலைவர்களை கேட்டுக் கொள்ளுகிறது.

5 தீபாவளிதினத்தில் சிறுவெடி, அந்நிய நாட்டுத்துணி முதலியவைகளை பகிஷ்கரிக்கவும் நமது இயக்க பத்திரிகைகளுக்கு சந்தா சேர்க்கவும் பிரசாரம்செய்ய மேல்கண்ட கமிட்டியாருக்கு சங்கம் அதிகாரம் கொடுக்கிறது.

பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது அடுத்த கூட்டம் 10-11-28 ல் போடப்பட்டுள்ளது.

காரியதரிசி.

முத்துப்பேட்டை சுயமரியாதை இளைஞர்களும் பார்ப்பனர் பாதம் வருடும் பாமரரும்

இவ்வூரில் நம்நாட்டு முன்னேற்றங்கருதி ஓர்சங்கம் நிறுவி சிலநாட்களாக வாரந்தோறும் கூட்டங்கள் கூட்டி பல அறிஞர் சொற்பொழிவாற்றி வந்திருப்பது யாவரும் அறிந்ததே. இச்சங்கந் தோன்றி வளர்வதுபோலவே சங்க இளைஞர்களும் தீவிர உணர்ச்சியுடன் ஊக்கங்குன்றாது உழைத்துவருகின்றனர்.

ஆகிலும் சமயப்பல நூலாராய்ச்சிக் காரரென்றும் இலக்கணவல்லுனரென்றும் பெருமைபாராட்டிப்பேசி அதன் மூலம் ஊதியம் பெற்றுஉலகை ஏய்த்துக்குடும்பம்நடாத்திவரும் பார்ப்பனர் பாதம் வருடும் ஒருசிலர் எங்கள் உணர்ச்சியையும் ஊக்கங்குன்றாத உழைப்பையுங்கண்டு பொறாராகி எங்கள் சங்கத்தையும் குறைகூறி வருவதோடு நில்லாது அருமைச்சங்கத் தலைவர்களாய கண்ணப்பரையும் நடுமொழிபகரும் நாயக்கரையும் குறைகூறுவது எங்கள் மனதைப் புண்படுத்துகின்றது.

ஆகிலும் இவர்கள் மூலைமுடுக்குகளிலும் வீட்டுக்குள்ளுமே பிதற்றுகிறார்களே யொழிய பொதுக்கூட்டங்களிலோ பத்திரிகைகளிலோ நாயக்கர் மீதும் கண்ணப்பர் மீதும் எவ்வித புகாரும் செய்வதில்லை, ஆகவே இவர்கள்போன்ற எவ்வளவு எதிரிகள் எங்கட்கு ஏற்படினும் என்னதீங்குசெய்ய நினைப்பினும் எதற்கும் அஞ்சாமல் எங்களது மகிழ்வுடன் அறிவுறுத்துகின்றோம். "காகம் ஆயிரம் கோடியாயினும் ஓர் கல்லின் முன்நில்லாது."

இவர்போன்ற எதிரிகள், பிதற்றித்திரியாது தங்கள் ஐயப்பாடுகளைப் போக்கிக்கொள்ளவேண்டுமானால் பத்திரிகை வாயிலாய் எதுகேட்பினும் விடையிறுக்கத் தயாராயிருக்கின்றோம். இதுவே ஆண்டகைமை

சுயமரியாதை இளைஞன்

இலங்கைத் தமிழர் பௌத்த சங்கம் கொழும்பு

மேற்படி சங்கத்தின் சார்பில் கடந்த 14-உ ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு வாளைத் தோட்டம் மைதானத்தில் புத்த தர்ம விஷயமாய் தமிழ் சிங்களமென்னும் இரு பாஷைகளிலும் திருவாளர்கள் பஞ்ஞாஜோதி பௌத்தபிக்ஷு, சே. கோவிந்தசாமி பிள்ளை, எம். நல்லையா, எஸ். சுப்பையா பிள்ளை, எம். கனகரத்தினம் என்பவர்களால் திருவாளர் எஸ். எம். நாயகம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் பல அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. தலைவர் தமது முடிவுரையில் "சிங்கள சகோதரர்களே! இப் பொன்னிலங்கையில் நாம் தழுவி வரும் நமது பௌத்த சமயத்தை அதனை பிறப்பிடமாகிய இந்திய சகோதரர்களுக்கும் புலப்படுத்துவது நமது பிரதான கடமையாகும்.

ஆகையால் தமிழர் பௌத்த சங்கத்திற்கு நம் சிங்கள சகோதரர்கள் யாவரும் இயன்ற உதவி செய்ய வேண்டுகின்றேன்" என்று கேட்டுக்கொண்டனர். பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

ஈரோட்டில் சுயமரியாதைப் பிரசாரம்

திராவிடன் பத்திரிகையில் அக்டோபர்மீ 31 தேதி ஈரோட்டில் ரிவோல்ட் பத்திரிகையின் ஆரம்பவிழா நடைபெறும் என்று தெரிவித்திருந்ததை முன்னிட்டுதஞ்சை, திருச்சி, மதுரை முதலிய ஜில்லாக்களிலிருந்து சிலநண்பர் வந்துவிட்டதை முன்னிட்டு 31 தேதி ஈரோட்டில் கோட்டை ரங்கநாதசாமி கோவிலுக்கு முன்புறத்தில் திரு மாக்கடை பழனியப்பமுதலியார் அக்கிராசனத்திலும் நவம்பர் முதல் தேதி ஈரோடு ரயில்வேஸ்டேஷனில் திரு நாய்க்கர் சத்திரத்தில் திரு ராமசாமி நாயக்கர் அக்கிராசனத்திலும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

திருவாளர்கள் எஸ் ராமநாதன், சாமிசிதம்பரனுர், எஸ் குருசாமி. பொன்னம்பலனுர், இராவணதாசன், கூத்தப்பெருமாள், முருகதாசன், ஈஸ்வரர், ராஜு, ராமசாமிநாயக்கர், முதலிய பலர் பார்ப்பனரல்லாதார் இயக்கம், சுயமரியாதை இயக்கம், கதரின் அவசியம், சாமிக்கு வேண்டுதல் பிரார்த்தனை திருவிழா அர்ச்சனை கட்டளை, சடங்கு, தேவாரம் திருவாசகம் பிரபந்தப் புராணங்கள் ஆகியவைகளின் பாராயணம், தத்துவார்த்தம், நாஸ்திகம், பெண்கள் நீதி ஆகியவைகளைப்பற்றி விஸ்தாரமாக பேசினார்கள்.

சென்னைமாகாண சமூகசீர்திருத்த மகாநாடு.

சென்னை மகாணசமூக சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு இம்மாதம் 26, 27, தேதியாகிய திங்கள் செவ்வாய் கிழமைகளில் சென்னையில் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில் நடைபெறும். செங்கல்பட்டு ஜில்லாபோர்ட்டுபிரசிடெண்டு திரு ராவ்பகதூர் எம். கே. ரெட்டியார் அவர்கள் வரவேற்புக் கழகத்தலைவர். திருமிகு டாக்டர் பண்டலே அவர்களின் மனைவியார் தேவி கமலாக்ஷி அம்மாள் அவர்கள் மகாநாட்டு கொடி உயர்த்துவார்கள். சென்னை மகாணசுகாதார இலாகா மந்திரி திரு எஸ் முத்தையா முதலியார் பி எ, பி எல், எ ப், எ ல், சி, அவர்கள் மகாநாட்டை துவக்குவார்கள் என்றும் பொது ஜனங்கள் தக்க ஆதரவளிக்கவேண்டுமெ என்றும் தென் இந்திய சமூகஊழிய சமாஜத்தின் காரியதரிசியாகிய திருவாளர் S. M. A. சமாத் அவர்கள் தெரிவிக்கின்றார்.

பாமக்குடியில் பிராமணீயம் ஒழிந்த கருமக்கிரிகைகள்

நாளது விபவ-ஞு அற்பசி-மீ 10-உ வெள்ளிக்கிழமை யன்று பகல் 12 மணிக்கு பாமக்குடி சின்னக்கடைத்தெரு திருவாளர் கோ. கோவிந்தன் செட்டியார் தமது பாட்டியார் பழனி அம்மாளுக்கு, பார்ப்பன புரோகிதரை அறவே ஒழித்து தாமே தமது இல்லத்தில்கருமக் கிரியை நடத்தி பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்புடன் அமுசனை உண்டி அளித்து சந்தனம், தாம்பூலம் வழங்கினர். மகாலிங்கம்.

சுயமரியாதை வீரர்களின் வெற்றி.

திருவண்ணாமலை நகரப் பாதுகாப்புக்கழகத்திற்குத் திருவாளர் டி எஸ் முத்துக்குமாரசாமி முதலியாரவர்களும், சைதாப்பேட்டை முனிசிபாலிட்டிக்கு ஜனுப் அப்துல்ரசாக் சாகிப் அவர்களும், செங்கற்பட்டு முனிசிபாலிட்டிக்கு திருவாளர் வேதாசல முதலியார் அவர்களும் அச்சபை உறுப்பினர் பெரும்பாலான வாக்குகளால் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைக் கேட்டு மகிழ்கின்றோம். இம்மூவரும சுயமரியாதை வீரர்களாகவும்பார்ப்பனரல்லாத கட்சியில் முதன்மையானவர்களாகவும் இருந்து ஏழைமக்களுக்கு நலம்புரிந்து வந்ததுபோலவே இனியும் இருந்து மேலும் மேலும் பேரும் புகழும் பெறுவாராக.

ஜஸ்டிஸ் கட்சி கனவான்களே!

நீங்கள் உண்மையாய் பார்ப்பனரல்லாதாரின் நண்பர்களானால்

உடனே கதரை உடுத்துங்கள்.

அதுதான் உங்களுக்கு பரீட்சை.

கதர், தரித்திரத்தைப்போக்கி எல்லோருக்கும் விடுதலை அளிக்கும்.

ஆனால்

"காங்கிரஸ்" "சுயராஜ்ஜியம்" என்பவை பார்ப்பனர்களுக்கு மாத்திரம் உத்தியோகமும் ஆதிக்கமும் அளிக்கும்.

முஸ்லீம் பள்ளிக்கூடத் திறப்புவிழா.

சட்டசபை அங்கத்தினர் ஜனுப் கே. பி, கே. எஸ், மகமத் மீரா சாகிபு அவர்கள் இடையகோட்டையில் முஸ்லீம் சிறுவர்களுக்காக நிர்மாணித்திருக்கும் பாடசாலையின் திறப்புவிழா நிகழும் நவம்பர் மாதம் 7-ம் நாளன்று மதுரை ஜில்லாபோர்டு தலைவரும் சட்டசபை அங்கத்தினருமான மிஸ்டர் ஆர். பௌல்கீஸ் அவர்களால் நடத்தப்படும்.

செம்பரம்பாக்கம்.— இம்மாதம் 11 தேதி 27-10 28ல் திரு அ அப்பாவு பிள்ளையவர்களும் திரு அ அண்ணாமலை பிள்ளையவர்களும் தங்கள் தாயாரின் இறந்த தின ஞாபகார்த்தமாக சுயமரியாதைக் கொள்கைப்படி புரோகிதமின்றி பல எளியவர்களுக்கு உணவளித்தனர். ஸோமேசன்

திருவாளர்-கிஞ்சப்பகவுண்டருக்கு அநுதாபம்

சிக்காரம்பாளையத்தில் 25—10—28 உ சச்சிதானந்த ஜீவகாருண்ய சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது

ஜீவகாருண்ய சங்கத்தலைவரும் ஒக்கலிக மாணவர் விடுதி மானேஜருமான திருவாளர் மணியம் நஞ்சப்பகவுண்டர் அவர்கள் தலைமை வகித்தார்.

ஒக்கலிக மஹாஜன கல்வி அபிவிர்த்தி சங்கத்தின் பிரசிடெண்டும் ஒக்கலிக மாணவர்களுக்காக காரமடையில் ஆஸ்டல் நடத்திவந்தவரும் ஒக்கலிக மஹாஜனங்களுக்காக பலவகையில் பாடுபட்டு வந்தவரும் சுயமரியாதை பிரசாரத்திலீடுபட்டு வந்தவருமான திருவாளர் நஞ்சைப்புளியம்பட்டி கிஞ்சப்பகவுண்டரவர்களை யாரோ துஷ்டர்கள் கொலைசெய்ததைக்கேள்வியுற்று இச்சங்கத்தாரும் பொது ஜனங்களும் மிக்க வருத்தமடைகிறார்கள்" என்னும் தீர்மானம் ஏகமனதாகதீர்மானிக்கப்பட்டது. இந்த அநுதாபத்தை அவர் குடும்பத்துக்கும் அவர் பந்துக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ர. பழனியப்ப கவுண்டர்

தொழிலாளர் காளியப்பனுக்கு மூன்றுமாதம் கடுங்காவல்.

நாகை தெ. இ. ரயில்வே தொழிலாளர் திரு: காளியப்பன் அவர்கள் நீடாமங்கலத்தில் சென்ற ரயில்வே நிறுத்தத்தின்போது ரயில்பாதையில் படுத்து சத்தியாக்கிரகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு வழக்கு சென்ற 31—10—28ல் முடிவடைந்து மூன்றுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார் என்பதாக ஒரு நிருபர் தந்திச் செய்தி அனுப்பியுள்ளார்.

ஈரோடு, டி. மு. கோர்ட்டு.

1926-ஞு அசல் நெம்பர் 1480
1928-ஞு E. P. R. நெம்பர் 1663
1928-ஞு E. A. நெம்பர் 1416

ஈரோடு தாலூகா புஞ்சை ஊத்துக்குளியிலிருக்கும் கப்பினி முதலியார்மகன் க. ஆங்கமுத்துமுதலியார்—வாதி.

ஷை யூரிலிருக்கும் காஜிபாஷாமியான் சாயபு என்கிற காஜிமைதீன் சாயபு மகன் கா. பா. காதர்பாஷாசாயபு—2ம் பிரதிவாதி

ஷை நெம்பரில் அடமான டிகிரியை நிறைவேற்றி ஏலத்துக்காக மனு செய்துகொண்டிருப்பதில் இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிக்க ஷை மனு 7—11—28 தேதியில்வாய்தாபோட்டிருக்கிறது. ஷை தேதியில் ஷை 2 ம் பிரதிவாதி தன் ஆக்ஷேபனைகளைத் தெரிவித்துக்கொள்ளாதவரையில் ஷை மனு ஒருதலைப்பட்சமாய் தீர்மானம் செய்யப்படுமென்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஈரோடு. 3-11-28 } கே. சுந்தரம் அய்யர் மனுதாரர் வக்கீல்.

தீபாவளிப் பண்டிகையின்

தத்துவம்

தமிழ் மக்களை ஆரியர்கள்
இழிவு படுத்துவது.
எந்தக்காரணத்தைக்கொண்டும்
அதைக்கொண்டாடினும்
மூடப்பழக்கமாகும்.



குடி அரசு

ஈரோடு விபவ-௵ ஐப்பசி-௴ 19-உ

எ. ராமசாமி முதலியாரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும்.

திருவாளர். எ. இராமசாமி முதலியார் அவர்கள் வகுப்புவாரித் தொகுதியைப்பற்றி தமது அபிப்பிராயத்தை பத்திரிக்கைகளில் ஒரு அறிக்கையின் மூலம் வெளியிட்டிருக்கிறார். அவ்வறிக்கை வருமாறு:—

"நான், சைமன் கமிஷன் முன்பாக பார்ப்பனரல்லாதார் கொடுத்த சாட்சியங்களை கவனத்துடன் கவனித்து வந்தேன். பம்பாய் மாகாண பார்ப்பனரல்லாதாரின் குறைகளைப்பற்றி நான் முடிவாக ஒன்றும் கூறமுடியாத நிலைமையில் இருக்கிறேன்; தனித் தொகுதிகள் பார்ப்பனரல்லாதார் அடைவதற்கு 1919 ல் பாராளுமன்றக் கமிட்டியினர் அனுகூலமாக இருக்கவில்லை. என்றாலும் அதைப் பார்ப்பனரல்லாதார் சமாதானத்துடன் சகித்து வந்தனர் என்று எனக்கு நினைவிருக்கிறது. சென்ற பத்துவருடங்களின் நடவடிக்கைகளை ஆய்ந்து பார்க்கையில் முன் செய்த தீர்மானம் இப்போது சைமன் கமிஷனால் மாற்றமடைதல் வேண்டுமென்பதற்கு முதிர்ந்த காரணங்களைக் காட்டியதாக எனக்குத் தென்படவில்லை.

எங்களுடைய கட்சியாவது, நானாவது எவ்வகைப்பேனும் வகுப்புவாரித் தேர்தலையும் நோக்கதிற்கு மாறுபட்டிருக்கவில்லை. வகுப்புவாரித் தொகுதித் தேர்தல்களால், பல கெடுதிகள் விளையுமென்ற கூற்றினை நான் நம்பவில்லை. ஐக்கியத் தேர்தலாலும்பிரத்தியேக ஸ்தானங்கள் வழங்கப்படும் உரிமையாலும் வகுப்புப்பேதம் நீங்கி அமைதியும்திருப்தியும் உண்டாகுமென்றும் நான்கருதவில்லை, இப்பொழுதுபொதுதொகுதியும் ஒதுக்கிவைத்தலும்ஆகியவைகளைபார்ப்பனரல்லாதார்மீது சுமத்தப்பெற்றிருக்கும் சென்னைமாகாணத்தின்நிலைமையே நான் கூறுவதற்குப் போதிய சான்றாகும். நான் இந்த அபிப்பிராயங்களை ஏற்கனவே டில்லி சர்வ கட்சி மகாநாட்டின் முன்பாக எடுத்துரைத்திருக்கின்றேன்.

சென்னைப் பார்ப்பனரல்லாதாரைப் பற்றிய வரையில், நான் அவர்களைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கு உரிமையில்லாவிட்டாலும் கூட, சென்னைப் பார்ப்பனரல்லாதார்களின் எந்தப் பிரசித்தி பெற்றதும் பொது ஜனங்களால் ஒத்துக் கொண்டதுமான மதிப்புள்ள சங்கங்களும் தங்களுக்குத் தனித் தொகுதி வேண்டுமென்று எவர்கள் முன்னிலையிலாவது வேண்டுவரேல் அது ஆச்சரியப்படத்தக்கதாகும். இப்பொழுது சென்னையில் வழங்கி வருவது போல், பிரத்தியேகஸ்தானங்கள் அளிக்கப்பட்ட கொள்கையினையாவது அளித்த முறையினையாவது சென்னைப் பார்ப்பனரல்லாதார்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். பார்ப்பனரல்லாதார் இதைப்பற்றி லக்ஷியம் செய்யமாட்டார்கள்.

என்றாலும் பார்ப்பனரல்லாதாருக்குச் சென்னையிலாவது பம்பாயிலாவது உரிமைப்பாது காப்பு அவசியமில்லையென்று நான் கூற முன் வரவில்லை. இவர்களின் நலத்தினைக்குலைக்கும் எதிரிகளைப்பற்றி நாம் பூனாவில் நடந்த விபரமான சாட்சியங்களில் கவனித்திருக்கின்றோம். நான் சென்ற சின்னாட்களாக பம்பாய் நிலைமையைப் பற்றி அறிந்து வந்தவரையில், பார்ப்பனரல்லாதார்களுக்குள் கட்டுப்பாடும், பரஸ்பர நம்பிக்கையும், உணர்வும் இன்னும் மிகுதியாய் இருக்க வேண்டுமென்னும் முடிவான அபிப்பிராயத்தைக் கொள்ளுகின்றேன். நான் இவ்வாறு மறைக்காமற் கூறுவதை என் பார்ப்பனரல்லாத நண்பர்கள் மன்னிப்பார்கள் என்று நம்புகிறேன்."

இவ்வறிக்கையில்எவ்வளவுதான் சாமர்த்தியமாகவும் தந்திரமாகவும் வார்த்தைகள் அமைக்கப்பட்டிருந்தாலும் இரண்டு விஷயங்கள் தெளிவாக அமைந்துவிட்டன. அதாவது ஒன்று, "செல்வாக்கும் மதிப்பும் பெற்று பொது ஜனங்களால் ஒப்புக்கொள்ளக்கூடியதுமான சென்னையில் உள்ள எந்த பார்ப்பனரல்லாதார் சங்கமும் தனித் தொகுதிகளைக் கேட்டால் நான் மிகுதியும் ஆச்சரியப்படுவேன்" (அதாவது கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன் என்பது) மற்றொன்று "பொதுத் தொகுதிகளின் மூலம் சில ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதையும் சென்னைமாகாணத்தார் லக்ஷியம் செய்யமாட்டார்கள்" என்பதாகும்.

எனவே இந்த ஸ்டேட்மெண்டிலிருந்து தனித்தொகுதியும் வேண்டாம் ஒதுக்கி வைப்பதும் வேண்டாம் என்பதே அவரது அபிப்பிராயத்தின் சாரமெனக்கொள்ளவேண்டியதாகும். இப்படிச்சொன்னவர் வேறுவழியும்காட்டவில்லை. எனவே பார்ப்பனரல்லாதாராகிய நாம் இவ்விரண்டும் வேண்டியதில்லை என்று முடிவு செய்துவிட்டோமானால் பிறகு பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பதாக ஒரு தனி அரசியல் இயக்கம் எதற்காக இருக்க வேண்டும்? மற்றபடி பார்ப்பனரல்லாதார் பூண்டு உள்ளவரை உத்தியோகத்திற்காகவும் உத்தியோகமற்ற பிரதிநிதித்துவத்திற்காகவும் சதாசர்வகாலம் அரசாங்கத்தின் காலடியில் தொங்கிக் கொண்டிருப்பதற்காகவா என்று கேட்கின்றோம். நிற்க "வகுப்புவாரித் தொகுதி எந்த பார்ப்பனரல்லாத செல்வாக்கும் பொதுஜனப் பிரதிநிதித்துவமும் மதிப்பும் கொண்ட சங்கங்களும் கேட்காது" என்பதானது பொறுப்புள்ள வார்த்தையா என்பதை சற்று யோசித்துப் பார்க்கவேண்டுமாய்க்கோருகிறோம்.

முதலாவதாக, திருமுதலியார் அவர்கள் மகமதியர்கள், கிறிஸ்தவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் முதலிய சகோதரர்களை பார்ப்பனரல்லாதார் என்கின்ற கூட்டத்தில் சேர்த்திருக்கிறாரா அல்லது அவர்களை ஒதுக்கிவிட்டாரா என்பது இதிலிருந்து சந்தேகமாயிருக்கின்றது. எனவே ஒருசமயம்அவர்களை ஒதுக்கி அந்தஸ்டேட்மெண்டில் இந்தவார்த்தைகளை வழங்கி இருப்பாரானால் இதுவரை பார்ப்பனரல்லாதார் என்னும் பேரால் அரசியலில் நடத்திவந்த காரியங்களும் எழுதியும் பேசியும் வந்த காரியங்களும் உண்மையல்லவென்று தான் ஏற்படும்.

ஒரு சமயம் அவர்களையும் சேர்த்துத்தான் சொல்லப்பட்டது என்று சொல்வாரானால், கண்டிப்பாய் திரு முதலியாரின் இந்த ஸ்டேட்மெண்டு முக்கியமாக அச் சமூகத்தாருக்கு பெரும் பாதகத்தையும் அச்சமூகத்தாரின் பிரதிநிதித்துவ சங்கங்களுக்கு அவமானத்தையும்விளைவிப்பதாகும். எப்படியெனில் "எந்த செல்வாக்கும் மதிப்பும் பெற்ற சங்கமும் தனித்தொகுதியையோ ஒதுக்கிவைப்பதையோ கேட்காது" என்று அவர் சொல்வதால் விளங்கும். பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாகச் சென்னைமாகாணத்திலும் உள்ள மகம்மதிய கிறிஸ்தவ, ஆதி திராவிட சங்கங்கள், சபைகள், அவற்றின் பிரதிநிதிகள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்திக்கொண்டே வருகின்றன.

அதுமாத்திரமில்லாமல் மீதியுள்ள பார்ப்பனரல்லாதார்களான முதலியார், செட்டியார், நாயக்கர், நாயுடு முதலாகிய பட்டங்கள் கொண்ட ஒவ்வொரு தனித் தனி வகுப்புச்சங்கங்களும் மகாநாடுகளும் பார்ப்பனரல்லாதார் என்கின்ற பெயரால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் ஒதுக்கி வைப்பதையும் கேட்டுத் தங்கள், தங்கள் சமூகமகாநாடுகளில் தீர்மானங்களும் செய்துகொண்டு வருகின்றன. எனவே திரு முதலியார் அவர்கள் தயவு செய்து எந்த சமூகத்தாராவது தனித்த முறையிலாவது பிரதிநிதித்துவ முறையிலாவது வகுப்புவாரி பிரதிநிதித்துவமோ ஒதுக்கிவைப்பதோ வேண்டாம்என்று சொல்லிவிட்டதாக தயவுசெய்து எடுத்துக் காட்டுவாராவென்று கேட்கின்றோம்.

அன்றியும் வகுப்புவாரி பிரதிநிதித்துவமோ ஒதுக்கிவைத்தலோ இல்லாவிட்டால் மகமதியர், ஆதித்திராவிடர் ஆகியவர்களின் கதிஎன்னவாகமுடியும் என்பதைப்பற்றிதிரு முதலியார் அவர்கள் சற்றாவது யோசித்து அதற்கு ஏதாவதுசமாதானம் அந்தஸ்டேட்மெண்டில் கூறிஇருக்கின்றாரா என்று கேட்கின்றோம்.

அரசியல் உலகில் பார்ப்பனப் பத்திரிகைகளின் செல்வாக்கு காரணத்தால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்கின்ற பேச்சு பேசுபவர்களுக்கு செல்வாக்கு கிடைப்பது கஷ்டம் என்கின்ற காரணம் ஒன்று தவிர வேறுவிதமாக வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்திற்கோ ஒதுக்கி வைப்பதற்கோ விரோதமானதும் அவசியமில்லாததுமான காரணம் ஏதாவது ஒன்

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

revolt

Edited by E. V. Ramasami & S. Ramanathan, M. A., B. L.
The Policy of the paper will be the policy of "Kudi Arasu."

PUBLISHED EVERY WEDNESDAY.

The first issue will come out on 7th Nov. 1928.

Annual Subscription:—

INLAND	Rs. 4
„ FOR STUDENTS	Rs. 3
FOREIGN	Sh. 8, $ 2. Rs. 5.

Send Your Subscription in advance.

Apply to :— The Manager, "REVOLT" Erode.

"ரிவோல்ட்"

புதன்கிழமைதோறும் வெளிவரும்.

நாம் சுமார் 3, 4, மாதங்களுக்குமுன் தெரிவித்துக்கொண்டபடி "ரிவோல்ட்" என்னும் ஆங்கில வாரப்பத்திரிகையின் முதல் இதழ் இம்மாதம் 7-ஆம் தேதியாகிய புதன்கிழமை வெளிவரும்:

ஆசிரியர்கள்:— ஈ. வெ. இராமசாமி,
S. இராமநாதன், M. A., B. L.

சந்தா விபரம்.

வருட சந்தா	ரூ. 4—0—0
மாணவர்களுக்கு	ரூ. 3—0—0
வெளி நாட்டிற்கு	ரூ. 5—0—0

முன் பணம் அனுப்பவேண்டும்.

விலாசம்:— மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

(10-ம் பக்கத்தொடர்ச்சி.)

றை எடுத்துக்காட்டமுடியுமா என்று கேட்கின்றோம்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்திற்கு தலைவர்களாயிருந்த-ஒரு கைவிரலை விட்டு எண்ணி விடக்கூடிய-சில தலைவர்களுக்கு மாத்திரம் உயர் பதவியும் யோக்கியதையும் மதிப்பும் கிடைத்துவிட்ட காரணத்தினாலேயே இனிமேல் அந்த சமூகத்திற்கே எந்த வித குறைவும் இல்லையென்று தீர்மானித்து விட்டார்களா? அல்லது சர்க்கார், எப்படி நமக்குவகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டு விட்டால் மக்கள் தங்களைவந்துதொங்கிக்கொண்டும் தங்களுக்கு சதா சர்வகாலம் அடிமையாய் இருந்து கொண்டும் இருக்கும் தன்மை போய்விடுமே என்று பயப்படுகிறார்களோ அதுபோல் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டுவிட்டால் இந்தத்தலைவர்கள் வீட்டு வாசலில் அதிகாரத்திற்கும் பதவிக்கும் ஆள்கள் வந்து தொங்கிக் கொண்டும் பல்லைக்காட்டி கெஞ்சிக் கொண்டும் இருக்கமாட்டார்கள் என்று நினைத்தார்களா என்று கேட்கின்றோம்.

சாதாரணமாக திரு முதலியாரவர்கள், இந்துக்கள் என்பவர்களுக்குள்ளாகவே ஆதித்திராவிடர்கள் என்பவர்களுக்கு அரசியலில் மேல்கண்ட இரண்டும் இல்லாமல் வேறு என்ன வழி சொல்லக்கூடுமென்று கேட்கின்றோம். தவிர, ஜஸ்டிஸ் பத்திரிகையிலும் திராவிடன் பத்திரிகையிலும் அடிக்கடி எழுதி கணக்கும் காட்டி வரும் "ஏகபோக உரிமை"யை தடுத்து எல்லோருக்கும் "சம சந்தர்ப்பம்" கொடுக்க இந்த இரண்டு வழியுமில்லாமல் வேறு என்ன மார்க்கம் காட்டக்கூடும் என்று கேட்கின்றோம்.

திரு. முதலியாரவர்களின் ஸ்டேட்மெண்டானது, பார்ப்பனரல்லாதார் இயக்கம் இதுவரை அரசியலில் செய்து வந்த வேலையை அடியோடு குழிதோண்டிப் புதைப்பதற்கு இடம் கொடுப்பதுடன் அந்த சமூகத்திற்கே நிரந்தர அரசியல் அடிமைத்தனத்தை நிலை நாட்டுவதற்கு உதவிசெய்வதுமாகுமென்றே நாம் சொல்லுவோம்.

இது மாத்திரமல்லாமல் மகமதியர்களையும் ஆதிதிராவிடர்களையும் நசுக்கி விட ஏதுவானதாகவும் முடியும். அன்றியும் பார்ப்பனர்களும் அவர்கள் கூலிகளும் இரண்டொரு அயலக்காரர்களும் போடும் போலிக் கூப்பாடுகளை மெய்ப்பிக்கவும் உற்ற துணையாகவும் இருக்கும். முடிவாக, வகுப்பு வித்தியாசம் நீங்கி எல்லோரும் ஒற்றுமையாய் இருக்க வேண்டும் என்கின்றதை விட எல்லோருக்கும் சம உரிமை இருக்க வேண்டும் என்பதே நமது முக்கிய கொள்கை. ஏனெனில் சம உரிமை கிடைத்து விட்டால் தானாகவே ஒற்றுமையும் வந்து விடும். சமஉரிமை இல்லாத இடத்தில் உண்மை ஒற்றுமை இருக்க முடியாது. ஆகவே சம உரிமைக்காக எவ்வளவு பெரிய கலகமும் ரத்தக்களரியும் ஏற்படுவதானாலும் அதைப்பற்றி யாரும் கவலைப்படவேண்டியதில்லை. ஏனெனில் சுதந்திரமும் சமத்துவமும் இல்லாத ஒற்றுமை வேறு; அவைகள் உள்ள ஒற்றுமை வேறு, ஆதலால் சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்குமாக எவ்வளவு ஒற்றுமையை தியாகம் செய்தாலும் சுதந்திரமும் சமத்துவமும் கிடைத்த பிறகு தானாகவே உண்மையான ஒற்றுமை தோன்றிவிடும். ஆதலால் எந்த முறையிலாவது எவ்வளவு கஷ்டநஷ்டப்பட்டாவது ஒவ்வொரு வகுப்பும் சமத்துவமும் சமஉரிமையும் பெறமுயற்சிப்பதே பொறுப்புள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாருடையவும் கடமையாகும்.

பிரசாரப்பள்ளிக்கூடம்-

ஈரோட்டில் ஏற்படுத்தப்போவதாய் தெரிவித்திருந்த சுயமரியாதைப் பிரசார பள்ளிக்கூடம் சென்ற மாதம் 31-தேதியில் ஆரம்பிப்பதாய் தீர்மானித்திருந்ததில், அந்த ஆரம்ப விழாவை நடத்தித்தர கேட்டுக்கொள்ளப்பட்ட திருவாளர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் வேறு அவசரத்தினால் அந்த தேதிக்கு வர சௌகரியப்படவில்லை என்றும் ஒரு வாரம் தள்ளிவைக்கவேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டதின் பேரில் தள்ளிவைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று, ஆனாலும் அந்தப்படி ஒருவாரத்தில் வைத்துக்கொள்வதில் தீபாவளி என்கின்ற பண்டிகை ஒன்று சமீபத்தில் வரப்போவதால் பள்ளிக்கூடத்திற்கு வருபவர்களில் சிலராவது தீபாவளிக்காக என்றாகிலும் ஒரு சமயம் ஊருக்குப்போக நேரிட்டாலும் நேரிடலாம் என்றும் அதன்மூலம் அவர்களுக்கு போக்குவரத்துச்செலவும் அசௌகரியமும் ஏற்படக்கூடும் என்றும் தோன்றியதால் தீபாவளி கழிந்தபிறகு ஏற்படுத்த தீர்மானிக்க வேண்டியதாயிற்று. திருவாளர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் பள்ளிக்கூட ஆரம்பவிழா நடத்துவார். எனவே அப்பள்ளிக்கூடத்திற்கு வர இஷ்டப்பட்டு முன் தெரிவித்துக்கொண்டவர்கள் கடிதம் பார்த்தவுடன் வரத் தயாராயிருக்கவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈ. வே. ராமசாமி.

"கடவுள் செயலால்" 5 கொலை.

கோயமுத்தூர் ஜில்லா தாராபுரம் தாலூகாவுக்கு அடுத்த கிராமத்தில் இந்த வாரத்தில் ஒரு சாமிகோவிலைப்பற்றி இந்துக்கள் என்போர்களுக்கும் மகமதியர்கள் என்போர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவினால் இரண்டு இந்துக்களும்மூன்று மகமதியரும்கொலை உண்டு.'கடவுளின் அடி'க்கு சென்றுவிட்டார்கள். பலர் காயம்பட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள். இரு கூட்டத்தார்களுடைய கடவுள்களும் கலகம் நடந்தஇடத்திற்கு நேரே விஜயம் செய்து கலகத்தையும் கொலைகளையும் அடிதடிகளையும் பக்கத்தில் இருந்து நடத்திக்கொடுத்துவிட்டு கொலை உண்டவர்களின் உயிர்களையும் எடுத்துக்கொண்டு தம் தம் இருப்பிடத்திற்கு சுகமே சென்றுவிட்டன.

இன்னும் இந்தமாதிரிசெய்கைக்காக இனியும் எத்தனை பேர்களை சர்க்காரைவிட்டு கொலை செய்யத் தூக்கிலிடவும் தெண்டிக்கவும் செய்யப்போகின்றதோ தெரியவில்லை. ஒருசமயம் தயவு வைத்து [illegible] விட்டுவிடுமோ தெரியவில்லை. என ஒரு நிருபர் திருப்பூரிலிருந்து எழுதுகிறார்.

திருச்சிஜில்லா தேவேந்திரகுல வேளாளர் மகாநாடு

பெரம்பலூருக்கடுத்த செஞ்சேரியில்28-10-28 ஞாயிறன்று கூடிற்று. கூட்டத்திற்கு ஈரோட்டிலிருந்து திருவாளர்கள் எஸ். ராமநாதன், சாமி சிதம்பரனாரும், மணப்பாறையிலிருந்து பி. சுப்பிரமணியமூப்பனார் முதலியவர்களும், திருச்சியிலிருந்து மு. பாலகிருஷ்ணன், ஜி. சன்யாசிமூப்பனார்முதலியவர்களும், பெரம்பலூரிலிருந்து யூனியன் சேர்மன் முதலியவர்களும் வந்திருந்தனர். மகாநாடு மாலை இரண்டுமணிக்குக் கூடிறது. திருவாளர் எஸ். ராமநாதன் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைத்து அருமையான விரிவுரை செய்தார்கள். பின்னர், வரவேற்புத் தலைவர் ஜி. சன்யாசி மூப்பனார் அவர்கள் அச்சிட்டிருந்த தமது பிரசங்கத்தைப் படித்தார். பிறகு மு. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமைவகித்துத் தமது முகவுரைப் பிரசங்கத்தைப் படித்து முடித்தார்கள். இருவருடைய பிரசங்கத்திலும், தாழ்த்தப்பட்டமக்களின் குறைகள் பலவற்றை எடுத்துக்காட்டி அவர்கள் முன்னேறுதற்கான வழிகளும் கூறப்பட்டிருந்தன.

பின்னர் சாமி சிதம்பரனார் அவர்கள் சமூகமுன்னேற்றம் என்பதுபற்றி ஒருபிரிவுரை செய்தார்கள். அதன்பின் சைமன் கமிஷனை வரவேற்பதாகவும், தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தோதல் தொகுதி வேண்டுமென்றும் தங்களுக்கென உழைத்துவரும் ஈ. வி. ராமசாமிநாயக்கர் ஜே. எஸ் கண்ணப்பர் முதலியவர்களுக்கு நன்றிசெலுத்துவதாகவும் பல தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன. மாலை ஆறுமணிக்கு மகாநாடு கலைந்தது. ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஒரு நிருபர்

லேபர் டிபார்ட்மெண்டும் ஆதிதிராவிடர்களும்

தற்போது அநேக ஜில்லாக்களில் லேபர்டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி ஆதிதிராவிடர்களுக்கு வேண்டிய நன்மைகளைச்செய்து வருவதாகச் சொல்லுகிறார்கள்.

லேபர் டிபார்ட்மெண்டில் ஆதிதிராவிடர்களுக்கென ஸ்கூல்வைத்து, உபாத்தியாயர்களுக்கு மாத்திரம் நிறைய சம்பளம் கொடுத்துவந்தால் போதுமா? 4-வது வகுப்புவரையில் பிள்ளைகள் படித்துவிட்டால் அதிலிருந்து என்னமுன்னேற்றம் அடைந்துவிடுவார்கள்? "எண்ணெய்ச்செலவேயொழிய பிள்ளை பிழைத்தபாடில்லை" என்பதற்கேற்க கவர்ன்மெண்டில் பணம் செலவழிகிறதேயொழியலேபர்டிபார்ட்மெண்டாரால் ஆதிதிராவிடர்கள் முன்னேற்றம் அடைந்ததாக ஒன்றும் காணப்படவில்லை. ஒவ்வொரு லேபர்ஆபீஸ் உள்ள ஜில்லாக்களிலும் ஆதிதிராவிடர்களுக்கென ஒரு ஹைஸ்கூல் வைத்து நடத்துவது நலம் என்று தோன்றுகிறது. லேபர் கமிஷனர் துரையவர்கள் இதுவிஷயத்தில் கவனம் வைத்தால் நலமாயிருக்கும்.

பி. மரியண்ணன், ஹெட்மாஸ்டர்,
போர்டு ஸ்கூல், சிக்கத்தம்பூர்,

தாழம்பூ பேசுமா?

(திரு. இராவணதாசன்)

திருவண்ணாமலையின் சிறப்பைப்பற்றி புராணக்காரர்களால் எழுதிவைக்கப்பட்டுள்ள 'அருணாசல புராண'மென்னும் நூலில் சிவன் ஒருகாலத்தில் இவ்வூரில் (திருவண்ணாமலையில்) பாதாளலோகத்திலிருந்து மேல்லோகம்வரையில் ஒரே நெட்டாக விட்டத்தைப்போல் அக்கினி சொரூபமாக அவதாரமெடுத்திருந்ததாகவும் அப்பொழுது அதன் அடிமுடியைப் பார்த்துவருவதற்கு பிரமதேவனும், மகாவிஷ்ணுவும் ஒருவருக்கொருவர் சபதம் செய்துகொண்டதாகவும், விஷ்ணு பன்றி அவதாரமெடுத்து பாதாளலோகம் சென்றதாகவும், பிரமன், அன்னப்பக்ஷி உருவுடன் ஆகாயத்தில் பறந்ததாகவும், அதுசமயம் சிவனுடைய திருமுடியிலிருந்த ஒரு தாழம்பூவானது தவறி பூலோகத்தை நோக்கி வந்துகொண்டிருந்ததாகவும், அதைக்கண்ட பிரமன் "ஓ! தாழம்பூவே நீ எங்கிருந்து வருகின்றாய்" என்று கேட்டதாகவும், அதற்கு அப்பூவானது "நான் சிவனுடைய திருமுடியிலிருந்து வருகிறேன், தாங்கள் எங்கு போகின்றீர்" என்று கேட்டதாகவும், அதற்கு பிரமதேவன் "ஓ! தாழம்பூவே நீ எனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டும். அதாவது நீ என்னுடன் பூலோகத்திற்கு வந்து மகாவிஷ்ணுவிடத்தில் நான் சிவனுடைய திருமுடியைப் பார்த்ததாக ஒரே ஒருபொய் சொல்லவேண்டும்" என்று கேட்டதாகவும், அதற்கு தாழம்பூவானது அப்படியே சொல்லியதாகவும், இதையறிந்த சிவன், பிரமதேவனைப் பார்த்து "உனக்கு பூலோகத்தில் கோவில்கள் இல்லாமல் போகக்கடவது" என்றும், தாழம்பூவைப் பார்த்து "இனிமேல் உன்னை நான் எனது சிரசில் அணிவதில்லை" என்றும் சபமிட்டதாகவும் எழுதிவைத்துள்ளார்கள்.

இப்பொழுது இந்த சுவாமிகளைப்பற்றியும் அவர்களுடைய அவதாரங்களைப் பற்றியும் நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. எங்காவது ஒரு தாழம்பூ மனிதனைப்போல் பேசுமா என்பதுதான் நமது கேள்வி. இவற்றை கொஞ்சமேனும் வெட்கமில்லாது எழுதிவைத்த "மகான்" இப்பொழுது உயிருடன் இருப்பானேயாகில் அவனை எந்த ஆஸ்பத்திரிக்கு அனுப்பலாமென்பதே பெரிய சந்தேகமாகிவிடும். பகுத்தறிவுக்கு உணவளிப்பதற்கு இதில் ஏதாவது மார்க்கமுண்டாவென ஆராய்ந்தால் அந்தக்கலம் பூச்சியமாகவேதான் இருக்கின்றது. நாகரீகமும், பகுத்தறிவும் சுயமரியாதையும் தாண்டவமாடும் இவ்விருபதாம் நூற்றாண்டில் எங்கோ ஒருவூரில் "தாழம்பூ பேசுகிறது" என்று யாரிடமாவது சொன்னால் இதை உண்மையென்று நம்புவார்களா? அல்லது அயோக்கியத்தனமென்று நினைப்பார்களாவெனக்கேட்கின்றோம். மக்களுடைய அறிவைக்கெடுத்து பாழும் குருட்டு நம்பிக்கையை உற்பத்திசெய்யும் புராணங்களையெல்லாம் சுட்டுப்பொசுக்கி கடலில் தள்ளவேண்டுமென "குடி அரசு" சொல்லுவதில் குற்றமென்ன

அறிவுச்சுடர்

[சாமி சிதம்பரனுர் எழுதுவது]

[முன் தொடர்ச்சி]

11. அன்பு, இரக்கம், அறிவு, ஆற்றல் இவைதான் உன்னை மனிதத் தன்மையுடையவனாகச் செய்வன.

12. கோவில் என்று சொல்லப்படுவது உன் மனந்தான். உன் மனத்துள்ளிருக்கும் பகுத்தறிவுதான் கடவுள்.

13. உலகில் உள்ள எவ்வுயிரும் துன்புறாமல் இன்புறுதற்கான செயல்களைச் செய். அதுவே உனக்கு ஆறுதலைத்தரும்.

14 கல்லிலும், செம்பிலும், மரத்திலுந்தான் கடவுளிருக்கிறார் என்று நம்புகிறாய். அந் நம்பிக்கையினால் நீ வருந்தித் தேடும் பொருளைக்கூட வீண் செலவு செய்கின்றாய்.

15 நீ கடவுளின் பேரால் செய்கின்ற செலவும், மதத்தின் பேரால் செய்கின்ற செலவும் உன்னை அடிமையாகவும், அறிவில்லாதவனாகவும், இழிந்தவனாகவும் செய்கின்ற ஒரு கூட்டத்தாருக்கே பயன்படுகின்றன. இதை நீயே நன்றாய் ஆராய்ந்து பார்

16 உண்ண உணவிலாமல் வருந்துகின்றவர் எத்தனை பேர்! உடுக்க உடையில்லாமல் துன்புறுகின்றவர் எத்தனை பேர்! இவர்களைச் சிறிது இரக்கத்தோடு நோக்குவாயானால், கடவுளின் பேராலும், மதத்தின் பேராலும் பொருள்களை வீண் செலவு செய்வாயா?

17 கடவுள், மதம் என்னும் சொற்கள் உன் அறிவை மழுங்கச் செய்கின்றன-

18 உன்னிடம் பகுத்தறிவென்னும் விளக்கு இருக்கின்றது. அது உனக்கு உண்மையை விளக்கிக் காட்டும். ஆனால் "முன்னோர் கொள்கை" என்று அடிக்கடி மறைக்கின்றது-

19 பழமை என்னுந் திரையை அச்சமின்மை என்னும் நெருப்பிலிட்டுக் கொளுத்திவிடு. உண்மை நன்றாய் விளங்கும்-

20 உன் அறிவுக்கு எது உண்மை என்று புலப்படுகின்றதோ அது உண்மைதான். எது நன்மை யென்று தெரிகின்றதோ அது நன்மைதான்- இதிற் சிறிதும் ஐயமில்லை.

கூத்தூர்
பாரதி இலவச இரவு பாடசாலை.

வீரர் ந. சி. முத்துகிருஷ்ணம் பிள்ளை அவர்கள் ஷை பாடசாலையை ஜாதி பேதமின்றி சமத்துவமாய் நடத்துவதை 30-10-28-ல் கண்டு வெகு சந்தோஷமடைகிறேன்.

மு. பொன்னுசாமி,
சுயமரியாதைசபை காரியதரிசி, கூத்தூர்.

வென்று நீங்கள் கவனித்துப்பாருங்கள். தாழம்பூ எங்கேயாவது பேசுமா? இது எவ்வளவு மோசமானசங்கதி! இதைஒரு பக்தியாக படிப்பவனுக்கு எப்படி அறிவுபிரகாசிக்கும்? பாழும் சோம்பேறிகளாலும் வயிற்றுப்பிழைப்புக்காரர்களாலும் எழுதிவைக்கப்பட்டுள்ள ஆபாச பொய்நூல்களெல்லாம் என்று நமது நாட்டைவிட்டு அகலுகின்றதோ அன்றே நமது நாடு விடுதலையடையும்.

பார்ப்பனக் குருக்கள் பணஞ்சேர்க்க செய்த படுமோசம்

'மானங்கெட்ட பார்ப்பான் ஊர்சிரிப்புக்கஞ்சான்" என்ற பழமொழிக்குச் சான்றாக ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஆசாரியக் குருக்கள் என்ற ஒருவர், தன் பத்தினி சகிதம் ஊர் ஊராகப்போய் தன்னுடைய பத்தினி கெர்ப்பமாயிருப்பதாக தாடி முதலியவைகளை வளர்த்துக்கொண்டு சிஷ்யர்களிடம்போய் "என்ன மோடப்பா, எம்பெருமான்கிருபை, அம்மாள் இப்போது 6மீ கெர்ப்பம், ஆனதால் சீமந்தம் செய்யவேண்டும் என்னமாவது கொடுங்கள்" என்று, சில பாமரமக்களை ஏமாற்றி ரூபாய்களாக 100, 50 என்று வசூலித்து ஸ்ரீவில்லிபுத்தூர் போய் ஆச்சியும் அய்யரும் சௌக்கியமாக சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவருக்குத் தொகை சாக்ஷியாய் கொடுத்த ஒருவர் மீ 10 ஆகியும் குழந்தை பிறந்த சங்கதி தெரியவில்லையே என்பதாக விசாரிக்கும்போது "குழந்தையுமில்லை குட்டியுமில்லை, அய்யங்காரும் ஆச்சியும் ஆகிய இருவருந்தான் இரண்டு குழந்தைகளே தவிர வேறு ஒன்றுமில்லை, அய்யங்காருக்கு 60 வயது, ஆச்சிக்கி 45 வயது; ஆச்சிக்கி ஏற்கெனவே மாதவிடாய் நின்றுபோக வேண்டிய வயது ஆகிவிட்டது- ஆச்சிக்கி விவாகம் முடிந்து 35 வருஷம் வரை உண்டாகாத பிள்ளை அய்யங்காருக்கு 60 வயதானபிறகா உண்டாகப்போகிறது" என்பது தெரிந்தது.

என்னே இவர்கள் மதியீனம். இந்த மானங்கெட்ட பாசகத்துக்கும நாம் மதியையிழந்து கும்பிட்டுக் கொடுத்துவிட்டு அவர்களால் பரித்தியக்காரப் பட்டமும் பெற்று, சூத்திரன் சூத்திரச்சி என்ற சொல்லுக்கும் பாத்திரமாகிறோம். இனியாவது இப்பார்ப்பனர்களின் சாஸ்திரம் என்ற சகுப்பையை நம்பி நாஸ்திகர்களாகாமல் வாஸ்தவமான நமது வைக்கம்வீரர்களின் உண்மைத் தத்துவமான கொள்கைகளையுடைய சுயமரியாதை இயக்கத்திலீடுபட்டு இப்பொய் பார்ப்பன குருக்களையும் சாஸ்திரிகளையும் பகிஷ்கரித்து அவர்களால் நாம் இதுவரையடைந்துவந்த வறுமைப்பிணியை அதிஜாக்கிரதையுடன் நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

"உண்மை விளம்பி"

ஈரோடு டி. மு. கோர்ட்டு.

O. S. No. 862 of 1928.

கொமார கவுண்டன்—வாதி.

முத்துக் கவுண்டன் வகையரா } —பிரதிவாதிகள்

ஷை நெம்பரில் வாதி அடமானப்பத்திரப்படி ரூ. 257—2—0 க்கு தாவா செய்து 2 தட்வை கோர்ட்டு மூலம் சம்மன் அனுப்பியும் சர்வாகாததால் மறுசமனுக்குத்திரவாய் 14—11—28ல் விசாரணை வாய்தா ஏற்பட்டிருக்கிறது. ஷை தேதி பகல் 11 மணிக்கு ஷை கோர்ட்டில் 1-ம் பிரதி வாதி நேரிலாவது வக்கீல் மூலமாயது ஆஜராய் தகுந்த முகாந்திரத்தைக் காட்டாதவரை அவன் பேரில்ஒருதலைபாய்தீர்ப்புப்பெறத்தக்கொள்ளப்படுமென்றவிபரம்தெரிவிக்கிறேன்.

ஈரோடு, 30-10-28 } (Sd.) A. Deivasikamani Gounder, Pleader for Plff.

விழுப்புரம் ஆதிதிராவிட பொதுஜன ஊழியர் சொசைட்டி

தென்இந்திய ஆதிதிராவிட பொதுஜன ஊழியர்களின் சொசைட்டியின் 3-வது மகாநாடு சென்னை ஆதிதிராவிட மகாஜன சென்டரல் சபாபிரசிடெண்ட் கனம் ராவ்சாஹிப் எம். சி மதுரைப்பிள்ளை அவர்கள் அக்ராசனத்தில் 15-10-28 மாலை 4-மணிக்கு விழுப்புரம் முனிசிபல் ஹைஸ்கூலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சுமார் 100 டெலிகேட்டுகள் சுமார் 60 மைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து வந்திருந்தார்கள். கூட்டமாரம்பித்ததும் வரவேற்பு கமிட்டியின் தலைவர் ஸ்ரீமான் எம். எம். ஞானபிரகாசம் பி. எ. பி. எல். அவர்கள், பிரசிடெண்ட் தமது இனத்தவர்கள் முன்னேற்றத்திற்கு செய்துவரும் வேலையைப்பற்றியும் பொதுவாக ஆதிதிராவிடர்கள் முன்னுக்கு வரவேண்டிய வழியைப் பற்றியும் எடுத்துப்பேசினார்.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

இந்தக்கூட்டம் சைமன் கமிஷனை முழுமனதுடன் வரவேற்கிறதுமல்லாமல் நேருரிபோர்ட்டை ஒப்புக்கொள்ளாமல் கண்டனம் செய்கிறது.

இந்தசொசைட்டியை சென்னை ஆதிதிராவிட மகாஜன சென்டரல் சபாவுடன் இணைக்கவும் ஸ்ரீமான் எம். எம். ஞானபிரகாசம் பி. எ. பி. எல். அவர்களை சொசைட்டியின் பிரசிடெண்டாக நியமிக்கவும் இந்தக்கூட்டம் தீர்மானிக்கிறது.

எம். சாமிநாதன்,
காரியதரிசி.

மதுரைத் தமிழ்ச் சங்கம்

சென்ற மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவரால் நடத்தப்பட்ட ஆங்கிலத் தமிழ்ப் பரீட்சையில் தஞ்சை ஜில்லா கல்லூரி, கலாசாலை முதலியவைகளில் தேறியவர்கள்;—

B. A. [தமிழ்]

கும்பகோணம் அரசுகலா கல்லூரி 1 சிதம்பரநாதன் 2 சுப்பிரமணியன்.

இண்டர்மீடியட்

மன்னார்குடி பின்ட்லே கல்லூரி கணபதி,

S. S. L. C.

மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூல் 1 சுந்தரேசன் 2 முத்தையன் 3 கிருஷ்ணசாமி 4 குப்புசாமி 5 பஞ்சாபிகேசன் 6 ரெங்கசாமி. திருக்காட்டுப் பள்ளி ஹைஸ்கூல் 7 நாகராஜன் 8 வரதராஜன், தஞ்சாவூர் செண்ட் பீட்டர்ஸ் ஹைஸ்கூல் 9 சிதம்பரம். ஒரத்தநாடு ஹைஸ்கூல 10 அங்கப்பன் 11 ஜெயராமன் 12 ராமானுஜலு 13 ஷண்முகசுந்தரம்.

(குறிப்பு) S. S. L. C, வகுப்பில் தமிழ்ச் சங்க பரீட்சையில் மொத்தமாகத் தேறிய 13 பேரில் 4 பேர் தஞ்சை ஜில்லாபோர்டு பிரசிடெண்டு திருவாளர் பன்னீர் செல்வம் அவர்களின் கண்ணுப் விளங்கும் ஒரத்தநாட்டைச் சேர்ந்தவர் என்பது பாராட்டத்தக்கது. தமிழ்ப் பண்டிதர் வி. நாராயணசாமி பிள்ளையவர்கள் நீடூழி வாழ்க.

கதரே கதியளிக்கும்

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! நமது நாட்டில் பூர்வீகத்தில் விவசாயம், கைத்தொழில், நெசவுத் தொழில் ஆகியவைகளில் மேம்பாடடைந்து அயல் நாடுகளுக்கு நம் சரக்குகளை அனுப்பி வாழ்ந்து வந்தோம். இடையில் மேனாட்டார் இயந்திர மூலம் நெய்த ஆடைகளை உபயோகப்படுத்தி நாளுக்கு நாள் கஷ்டதசையை அடைந்து வருகிறோம். இவற்றையெல்லாம் உணர்ந்து நாம் முன்னிருந்த நிலைமையை அடையவும் வறுமை நோயினின்று விலகவும் சுத்தக்கதராடையே அணிவோமாக. கதர் அணிந்தால் ஏழை மக்களின் பசிப்பிணி ஒழியும், ஒவ்வொருதேசத்தினரும் தங்கள் தங்கள் கைத் தொழில்களை விருத்தி செய்து வருகிறார்கள். நாமும் நம் கைத்தொழில்களை விருத்தி செய்து முன்னேற்றமடைவதற்கு எல்லோரும் கதராடையே அணிவோமாக என அருப்புக்கோட்டை கதர் அபிவிருத்தி சங்கத்தார் எழுதுகிறார்கள்,

சுயமரியாதை சடங்குகளும் நன்கொடையும்,

பினாங்கு கோலக்கங்ஸார் கெவர்னர் மலையில் என்னு மைத்துனர் ஸ்ரீமான் க. பெருமாள் பிள்ளைக்கும் ஸ்ரீமான் வேப்படியார் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும் சென்ற மாதம் 1-9-28 ல் பார்ப்பன புரோகிதமின்றி கனம் அருணாசல பண்டிதரின் நல் முயற்சியால் விவாகம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. ஜாதி வித்தியாசமின்றி செட்டியார் நாயக்கர் பண்டிதர் பஞ்சமர் உள்பட சுமார் 250 சகோதரர் விருந்தும் செய்தது குறிப்பிடத்தக்கது. "குடிஅரசு" பத்திரிகைக்கு ரூ 1 நன்கொடையும் அளிக்கப்பட்டது.

எம். எம். சுந்தரம்.

தலைநாயர் போர்டு முதலாதாரம்பபாடசாலை தலைமை ஆசிரியர் எம். எ. முருகேசன் அவர்கள் தமது பிதா மாதா இருவருக்கும் மாஸியத்திதியை புரோகிதத்தை அறவே ஒழித்து அநேகமவ உன் மையுடன் ஏழைகளுக்கும் சுற்றத்தார்களுக்கும் அன்போடு அன்னம் படைத்து முடித்தனர். 16-10-28 ல் தமது மகவுக்கு பார்ப்பனரை முற்றும் நீக்கி பதினாறும் நாள் சடங்கும் நாமகரணமும் காப்புகுட்டும் செய்து நமது "திராவிடனுக்கு" அன்றுதினம் எட்டணா நன்கொடையாகவும் அனுப்பினது குறிப்பிடத்தக்கது.

வேளாங்கண்ணி மாணிக்கம்

அகில-இந்திய தேவாங்கர் மகாநாடு

கோயமுத்தூர் சாரதா பெண்பாடசாலையில் 21—10—28 ல் திருவாளர் கே-ராமசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 2 வது அகில இந்திய தேவாங்கர் மகாநாட்டை கோவையில் நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு திருவாளர் வி. வீரப்பசெட்டியார் தலைவராவும் திரு கே. ராமசாமிசெட்டியார் உபதலைவராகவும், திருவாளர்கள் வி. அருணாசலம செட்டியார், சி எம் ராமச்சந்திரன் செட்டியார் காரியதரிசிகளாகவும் உள்ள ஒரு காரியக்கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது, தர்மலிங்கம்

பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்

சேந்தமங்கலம் திரு. எஸ்- ஆர்- வைரப்பெருமாள் பிள்ளை சுமார் 7- 8 வருடகாலமாக பார்ப்பனரைக்கொண்டு நடத்திவந்த தமது தாயாரின் வருஷத்திய ஞாபகவிழாவை நாளது ௵ ஐப்பசி மாதம் 5 தேதி ஞாயிற்றுக்கிழமையன்று பார்ப்பனரை அறவே நீக்கி பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்து முடித்தார்.

சேலம்ஜில்லா ஓமலூர் தாலூகா எட்டிகுட்டைப்பட்டி கிராம பஞ்சாயத்துத் தலைவர் திருவாளர் காளிக்கவுண்டரின் இல்லத்தில் சென்ற 22—10—28 தேதி இரவு சரஸ்வதி பூசை அதிவிமரிசையாக நடைபெற்றது. பூஜை முடிந்ததும் அங்கு எழுந்தருளியிருந்த பெரியார்கட்கும் சுற்றத்தினர்களுக்கும் பள்ளிமாணவர்களுக்கும் ஜாதிவித்தியாசமின்றி ஆதிதிராவிடமாணவர்களுள்பட எல்லோருக்கும் ஒருமிக்க, ஒரே இடத்தில் சமபந்தி விருந்தளிக்கப்பட்டது. அதுசமயம் நம் கனம் பஞ்சாயத்தலைவரின் இல்லக்கிழத்தியும் அவரது குடும்பத்தாரும் காட்டிய முகமலர்ந்த அன்புபோற்றத் தகுந்தது.

நாட்டுவாசிகளில் ஓமலூர் தாலூகாவில் முதன்முதல் சமபந்திபோஜனவழக்கத்துக்குவழிகாட்டியவர் திரு. காளிகவுண்டரே யாகும் இனிமேலாவது இதைக் கண்ணுறும் தனவான்கள் நகரங்களிலும், வெளியூர்களிலும் தீண்டாமை என்னும் தீயவழக்கத்தை ஒழிக்க, நம் கனம் தலைவருடன் ஒத்துழைப்பார்களென்றெண்ணுகிறேன். மாணிக்க கவுண்டர்

முத்துராமலிங்கபுரம் திரு வ-தி-சா-அழகர்சாமி ரெட்டியார் சென்ற புரட்டாசி மாதம் 25 தேதி தமது தந்தையின் திதியை பார்ப்பனப் புரோகிதமின்றி தாமே தமதுவீட்டில் பந்துமித்திரர்களுக்கு அன்னமிட்டு முடித்தார்.

ஷையூர் திரு வ-தி-சா-க-வெங்கிடசாமி ரெட்டியார் சென்ற புரட்டாசி மாதம் 30 தேதி தமது பாட்டனார் திதியை பார்ப்பனனை நீக்கி விநதிருந்து முடித்தார்.

ஷையூர் திரு வ-கொ-வெ-வெங்கிடசாமி ரெட்டியார் 12 ௵ காலமாக பார்ப்பனருக்கு தானமாகக் கொடுத்து செய்துவந்த தமது தந்தையின் திதியை நாளது ஐப்பசி மாதம் 6தேதி பார்ப்பனீயமின்றி பந்துமித்திரர்களுக்கு அன்னமளித்து முடித்தார் தி-சு வெங்கடசாமி

மேலூர்தாலூகா கவட்டாயம்பட்டி கிராம முன்சீபு திருவாளர்கள் ஆ. க. பெரியகருப்பனம்பலம் ஆ. க. ஆதிஅம்பலம் ஆ. க. வெள்ளையனம்பலம் ஆ. க. கருப்பனம்பலம் ஆகிய நால்வர்களாலும் 15 வருஷகாலமாக பார்ப்பனரைக் கொண்டு நடத்தப்பட்டுவந்த தங்கள் மாதா பிதா வருஷ திதியை, நாளது ௵ ஐப்பசி மாதம் 2 தேதி சனிக்கிழமை பார்ப்பனரை ஒழித்து பந்துக்களுக்கும் ஆதிதிராவிட சகோதரஏழைகளுக்கும் உணவும், உடையும் கொடுத்து முடித்தார்கள். சாப்பாடு முடிந்தபின்னர் ஏழைகளும் ஆதிதிராவிடர்களும் "ஈ-வெ-ராமசாமி நாயக்கருக்கு ஜே! ஜே!! ஜே!!!" என்று முழக்கினது குறிப்பிடத்தக்கது. துங்கன் சொக்கனுண்டித் தேவர்

திருத்துறைப்பூண்டியில் பிரபலஸ்தரும் இங்கிலீஷ் வைத்தியசாலை வைத்திருப்பவருமான டாக்டர் திருவாளர் எஸ் சாமிநாதபிள்ளை அவர்கள் தமது இல்லக்கிழத்தி ஸ்ரீமதி இரத்தினத்தம்மாள் காலஞ்சென்றதை முன்னிட்டு நாளது ஐப்பசிமாதம் 5ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பார்ப்பனரின்றி திதி செய்வித்தார். அத்துடன் ஏழைகளுக்கு உணவு அளித்தது போற்றத்தக்கது

திரு. சௌந்திரபாண்டிய நாடாருக்கு வாழ்த்து.

வஜாலாபாத்

நேற்று மாலை இத்துமத பாடசாலைத்தலைவர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் கூடிய திருவாளர் சௌந்தரபாண்டிய நாடார் எம் எல் சி அவர்கள் ஜில்லாபோர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றதற்குப் பெரிதும் உவகைப்பூத்து

"திரு சௌந்தரபாண்டிய நாடார் அவர்களை இராமநாதபுரம்ஜில்லாபோர்டுக்கு தலைவராக சனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் தேர்ந்தெடுத்தமை பெரிதும் பாராட்டற்பாலதே. திரு சௌந்தரபாண்டிய நாடார் அவர்கள் நாட்டிற்கு நல்லன நாடிச் செய்யும் இயற்கை அருங்குணம் வாய்ந்தவர். ஏழைகள்மாட்டுக்கழிபெருங் கண்ணோட்டமுடையகல்விமான். இளம்பருவத்திலேயே சென்னை சட்டசபையில் அங்கம் வாய்க்கப்பெற்றவர், வாய்மையும் நேர்மையும் நல்லொழுக்கமும் நிறையப்பெற்றவர் இத்தகைய நமது திருவாளர் சௌந்தரபாண்டிய நாடார் அவர்கள் நீடியஆயுள் பெற்று எல்லாநலன்களையும் பெற்று நீடூழிவாழவேண்டுமென்று விழைகின்றோம்" என வாழ்த்தினார்கள்.

ஒரு நிருபர்

கோயமுத்தூர்

சௌத் இண்டியன் லிபரல் பெடரேஷன் சங்கத்தார் 26-10-28 ல் மாலை 5-30 மணிக்கு கோவை ஜகதாலதயா கட்டிடத்தில் கோவை முனிசிபல் வைஸ்சேர்மென் திரு வி அருணாசலம் செட்டியார் அவர்கள் தலைமையில்கூடி. திருவாளர் W. P. A. சௌந்தரபாண்டிய நாடார் எம் எல் சி. அவர்களை ராமநாதபுரம் ஜில்லாபோர்டுக்கு தலைவராக நியமித்ததற்காக சென்னை மாகாண கவர்னர்துரையவர்களுக்கும்திருநாடார்அவர்களுக்கும் தாழ்த்தப்பட்டசகோதரர்களின் சார்பாக நன்றி செலுத்துவதாக தந்திகள் அனுப்பியுள்ளார்கள்.

நிருபர்

மதுரை

நாடார் மகாஜனங்கள் மதுரை "கீழ்பட்டி ஹாலில்" கூடி திருவாளர் W. P. A. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களை ராமநாதபுரம் ஜில்லாபோர்டுத் தலைவராக நியமித்ததற்காக சென்னை மகாண கவர்னர் துரை யவர்களுக்கும் முதல்மந்திரியவர்களுக்கும் நன்றி செலுத்துவதாகச் சபைத்தலைவர் எம் வி பழனிச்சாமி நாடார் தந்தி மூலம் தெரிவிக்கிறார்

நிலக்கோட்டை.

சகோதர சகோதரிகளே இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டாயிருந்த மகா-ள-ள-ஸ்ரீ கனம் ஸ்ரீமான் இராமநாதபுரம் இராஜா அவர்கள் காலஞ்சென்றபின்னர் டை ஸ்தானம் காலியாயிருந்தபடியால் நாடார்குலத்தலைவரில் மிகுந்த ஆற்றல் படைத்தவரும் பிரபல தனவந்தரும் நாடார் மகாஜன சங்கக்காரியதரிசியும் சென்னை சட்டசபை மெம்பருமான பட்டிவீரன்பட்டி உயர்திருவாளர் W. P. A. சௌந்திரபாண்டியநாடார் அவர்கள் கவர்மெண்டாரவர்களால் டை ஜில்லா போர்டுக்கு பிரசிடெண்டாய் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக கவர்னர் துரையவர்களுக்கும் ஸ்தல ஸ்தாபன மந்திரியார் அவர்களுக்கும் எமது குலத்தார் சார்பாக என்றும் மறவா நன்றியை செலுத்துகிறேன். எல்லாம் வல்ல இறைவன் திரு நாடார் அவர்களுக்கு நீடிய ஆயுள் அருள்வாராக. எஸ் பி என் செட்டியார்.

கோடைக்கானல் ரோட்

இந்த 27-10-28 தேதியாகிய சனிவாரத்தன்று பிற்பகல் 2-30 மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் டிரெயினில் கனம் சௌந்திரபாண்டிய நாடாரவர்களும் திரு. பி. டி. ராஜன் அவர்களும் மதராஸிலிருந்து மதுரைக்குப்போகும் மத்தியில் டை யாரை பட்டிவீரன் பட்டியிலிருந்து வர்த்தகம் பெரியதம்பி நாடார் அவர்களும் அம்மைய நாயக்கனூரிலுள்ள பஞ்சாயத்து கோர்ட்பிரஸிடெண்டு என் முத்துமாலைபிள்ளையும் டை யாருடைய சகாக்களும் இன்னும் பலரும் கொடைகானல் ரோட் Chief ஸ்டேஷன்மாஸ்டர் கனம் பி சேராம் அவர்களும் கொடைகானல்ரோட் ரயில்வே ஸ்டேஷனில் மிக்க அன்போடு வரவேற்று பூமாலை சூட்டி வரவேற்றுவாழ்த்தினர்கள்.

கனம் நாடாரவர்கள் ஸ்டேஷனுக்கு வந்திருந்த எல்லா சிநேகிதர்களோடும் மகா அன்போடு பேசி விட்டு மதுராபுரிக்குச்சென்றார். ஒரு அன்பர்

சிவகாசி

ஸ்ரீமான் W. P. A. சௌந்தரபாண்டிய நாடார் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது எமக்கு அடங்காத மகிழ்ச்சியைத் தருகிறது. அவர் டை ஜில்லா ஜனங்களுக்கு வேண்டிய நன்மைகள் செய்யவும் டை உத்தியோகத்தை வகிக்கும் தகுதியும் உடையவர் அவருடைய நியமனம் பாராட்டத்தக்கதாகும் என திரு அ-த- நடேசசாமி நாடார் அறிவிக்கிறார்

இராமநாதபுரம ஜில்லா போர்டுக்கு தலைவராய் நியமிக்கப்பட்டிருக்கும்

பட்டிவீரன்பட்டி திருவாளர்
W. P. A சௌந்திரபாண்டியநாடார்
M. L. C அவர்கள்

விருதுநகர்

நாடார் பரிபாலன சங்கத்தின் ஆதரவில் 23-10-28 ல் க்ஷத்திரிய வித்யாசாலையில் ஸ்ரீமான் வே வ ராமசாமி நாடார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது

"சமூக விடுதலை" விஷயமாயும் திருவாளர் சௌந்திரபாண்டிய நாடார் அவர்களின் நியமன விஷயமாயும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கீழ்க்கண்ட தீர்மானம் தலைவர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது- தீர்மானமாவது:—"இந்நாடார் பெருமக்கள் கூட்டம் பட்டிவீரனபட்டி திருவாளர் சௌந்தரபாண்டிய நாடார் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைவராக நியமிக்கப்பட்டது குறித்து சந்தோஷம் அடைவதுடன் சென்னை அரசாங்கத்திற்கும் தங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறார்கள்"

நன்கொடைகளும் சுயமரியாதைத் திருமணங்களும்

அன்புடையீர்,

எனது மகன் திருவளர் செல்வி தெய்வயானைக்கு இம்மாதம் 12-ம் தேதி நடைபெற்ற திருமணத்தை முன்னிட்டு "குடி அரசு" பத்திரிகைக்கு நன்கொடையாக ரூபாய் 5 மணியார்டர் மூலம் அனுப்பியுள்ளேன். பெற்றுக்கொள்ளவேண்டுகிறேன் அன்பன்

சு. வி. நா. நாச்சியப்ப செட்டியார்,
நாச்சியபுரம்

(ப-ர்) தாங்கள் அன்புகூர்ந்தருளும் நன்கொடையை மனமார்ந்த வந்தனத்துடனும் ஏற்றுக்கொள்வதுடன் மணமக்கள் எல்லா நலன்களும் பெற்று நீடூழிவாழவேண்டுமாய் விழைகின்றோம்.

பே-புதுப்பட்டி இந்நகர் சுயமரியாதைச் சங்கத்தின் தீவிரமுயற்சியின் பயனாக இந்நகரிலே சுயமரியாதை உணர்ச்சியுண்டாகி நளது விபவ ஆண்டு ஐப்பசித்திங்கள் மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை அடியில்கண்டவர்களுக்கு, அர்த்தமற்ற பார்ப்பனீய மூடப்பழக்க வழக்கங்களை அறவே ஒழித்து தமிழ்முறையில் திருமணங்கள் வேலாயுதபுரம் திருவாளர் பாலசுப்ரமணிய பிள்ளையவர்களால் நடத்திவைக்கப்பட்டன.

1, திரு. சி. பா. ரெங்கப்ப ரெட்டயாரவர்களுக்கும் ஸ்ரீமதி லக்ஷிமியம்மாளுக்கும், 2. திரு க. வெ. ரெ. மகாலிங்கம் ரெட்டியாரவர்களுக்கும் ஸ்ரீமதி லிங்கம்மாளுக்கும், 3 திரு. ம. கி. கா. கிருஷ்ண ரெட்டியாருக்கும் ஸ்ரீமதி காச்சாரம்மாளுக்கும் 4. திரு பு. ரெ. அ. ராமசாமிக்கும் ஸ்ரீமதி பாப்பம்மாளுக்கும், 5 நாகு. தனக்கோடி ரெட்டியாருக்கும் ஸ்ரீமதிசித்தம்மாளுக்கும், 6 திரு-பு. கா. ராமசாமிக்கும் ஸ்ரீமதி அழகம்மாளுக்கும் ஆக ஆறு திருமணங்கள் நடைபெற்றது.

ஒவ்வொரு திருமண முடிவிலும் உயர்திருவாளர்களான மாடவரம் என். வி. லிங்கமவர்களாலும் பிரிண்டி முத்தையா சேர்வையவர்களாலும் பிரசங்கம் செய்யப்பட்டது. திருமணமக்கள் இந்நகர் சுயமரியாதைச் சங்கத்துக்கு நன்கொடையளித்தார்கள்.

பாளையங்கோட்டை உயர்திரு த. பாக்கியம் பண்டிதரவர்களின் மூத்தசகோதரர் திரு த முத்துசாமி பண்டிதரவர்கள் திருநிறைச்செல்வன் பிச்சய்யா அவர்களுக்கும் அருகன்குளம் திருவாளர் பா சாமிபண்டிதரவர்கள் திருநிறைச்செல்வி இசக்கியம்மாளுக்கும் 24—10—28ல் பார்ப்பனீயமின்றி குலப் பெரியார்களால் திருமணம் செய்யப்பட்டது உண்மை நெறியை மக்களுக்குப் புகட்டும் "திராவிடன்" "குடி அரசு" பத்திரிகைக்கு முறையே ஒவ்வொரு வெண்பொற்காசு நன்கொடையாக வழங்கப்பெற்று மணம்இனிது முடிந்தது கண்டானந்திப்போன்

கடைக்கேணி

திரு சௌந்திரபாண்டிய நாடார் ராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைவராகநியமிக்கப்பட்டது பற்றி மகிழ்வெய்துகிறோம் சட்டசபையிலும் வியாபாரிகளுக்கும் சுயமரியாதைக்கும் உழைத்துவரும் இப்பூபதிக்கு இப்பதவி கிடைத்தது யாருக்குத்தான் மகிழ்ச்சி யளிக்காது இவ்வன்னாரைப் போற்றுவதோடு அன்னார் நீடூழி வாழவேண்டுமென்று இந்நகர்வாசிகள் கோருகிறார்கள்.

கடவுளை வணங்க தரகர் வேண்டுமா?

5ம் பக்கம் தொடர்ச்சி

னேற்றத்திற்கு மதங்கள் முட்டுக்கட்டை போடுகின்றன. மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால் மதவலையை அறுத்து எறிய வேண்டும். அதற்கு தக்க ஆயுதம் வேண்டும். எங்கும் மதவலை வீசப்படுகிறது. ஆயுதம் ஒன்றுதான் இருக்கின்றது. அது "குடி அரசு" தான். "குடி அரசு" இல்லையேல் நம் கதி என்னவாகும்? "குடி அரசை" கைக்கொள்மின்! மதவலையை அறுத்தெறிமின்! விடுதலை பெறுமின்! சுயமரியாதையை அடைமின்!

நாகை வெளிப்பாளையம் சுயமரியாதைத் திருமணம்

நாகை வெளிப்பாளையம் சிவன் வடக்குவீதி எண் 2379 நெ இல்லத்தில் விருகுவாடி திரு தெய்வமல்லி கொண்டார் குமரர் திருவாளர் செல்வன் அப்பாவுமல்லி கொண்டார் அவர்களுக்கும்ஒரத்த நாட்டைச்சேர்ந்தபுலவன்காடு பேய்க்கிரமங்கோட்டை திரு மலையப்ப சேனைகொண்டார் குமாரி திருமதி தங்கச்சியம்மாளுக்கும் விபவ ஆண்டு அற்பசித்திங்கள் 5 ம் நாள் திரு சோ முருகேசம் அவர்களால் எவ்வித புரோகிதமும் மூடச் சடங்குளும் இன்றி கீழ்கண்டபடி தமிழில் திருமணம் நடத்தப்பட்டது.

அதாவது, மணமகள் எல்லாம் வல்லசர்வசக்தியைவணங்கி, "எனது அன்பார்ந்த நாயகா! நான் எனது முழுமனதுடன் தங்களை மணந்து தங்களுடன் உடலும் உயிரும்போல ஒருமித்து வாழ்ந்து தங்கள் சுக துக்கங்களை என்சுக துக்கங்களாக பாவித்து தங்களுக்கு பணிவிடை செய்வதில் உண்மையுள்ள பணியாள்போலவும் தங்களை போஷிப்பதில் தாய்போலவும் தங்களுக்கு யோசனை சொல்வதில் மந்திரியைப்போலவும் இருந்து தங்களுடன் இல்வாழ்க்கை நடத்துவதாகச் சம்மதித்து இவிடம் சூழ்ந்துள்ள சகல ஜனங்களுமறிய தங்களை என் ஆருயிர்க் கணவனாக ஏற்றுக்கொண்டு இந்த மணமாலையை நான் தங்களுக்குச் சூட்டுகிறேன்"

என்று மணமகனுக்கு மாலையிட, மணமகன் "எனது ஆருயிர் நாயகி! நான் என் முழுமனதுடன் உன்னைமணந்து உன்நலங்கருதுவதிலும் உன்னை போஷிப்பதிலும் பாதுகாப்பதிலும் உண்மையுள்ள சிநேகனைப்போல் இருந்து உன்னுடன் இல்வாழ்க்கை நடத்துவதாகச் சம்மதித்து இவிடம் சூழ்ந்துள்ள சகல ஜனங்களுமறிய உன்னை எனது அருமை மனைவியாக ஏற்றுக்கொண்டு இந்த மணமாலையையும் மங்கல்யத்தையும் நான் உனக்குச் சூட்டுகிறேன்"

என மணமகன் மணமகளுக்குமாலைசூட்டி திருமாங்கல்யம்பூட்டினர்- பிறகு வந்திருந்தவர்களுக்கெல்லாம் சந்தன தாம்பூலம் வழங்கப் பெற்றது

சோ. கோ. வீரவாத்தினம்

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

மதுரை ராமநாதபும் ஜில்லாக்களில் சுயமரியாதைப் பிரசாரம்,

பட்டுக் கோட்டை உயர் திரு அழகர்சாமி நாயுடு அவர்களும் மாயவரம் திரு. எஸ். வி. லிங்கம் அவர்களும் சென்ற 3 ந் தேதியிலிருந்து 7 ந்தேதி வரையில் மதுரையை அடுத்த கிராமங்களுக்கு சென்றிருந்தார்கள் பின் 10 உமுதல் 15 வரை சோகில்பட்டி, புதுப்பட்டி, கோபாலபுரம், அருபபுக்கோட்டை, சோழவந்தான், மதுரை, முதலிய இடங்களுக்கும் 18 தேதியிலிருந்து 24 தேதி வரை பாளையம்பட்டி, பந்தல்குடி, மதுரை, பரமக்குடி, மானா மதுரை, சிவகெங்கை முதலியஇடங்களுக்கும் விஜயம்செய்து பொதுக் கூட்டங்களில் சுயமரியாதைப் பிரசாரம்செய்தார்கள். 25ஆம் தேதியிலிருந்து29வரை தன வைசிய நாட்டு சுற்றுப்பிரயாணத்தைமுடித்துக் கொண்டு இம்மாதத் கடைசியில் தஞ்சை செல்வார்களென இராமநாதபுரம் ஜில்லா சுயமரியாதைச் சங்க அமைச்சர் திரு கருப்பய்யா பிள்ளை அறிவிக்கிறார்,

இங்கிலீஷ் கரஸ்பாண்டன்ஸ் டிபரர்ட் மெண்ட்.

30 நாளைக்குள்.

தமிழ் வாசிக்கத்தெரிந்த எவரும் ஸ்பேஷல் இங்கிலீஷ் கோர்ஸை தபால் மூலம் படித்துவிட்டு சுயாதீனமாய் தொழில், வியாபாரம் நடத்த வேண்டுமா? அல்லது சர்க்காரால் ஆங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் ஜூனியர், சீனியர் பரீக்ஷைகளுக்கு வீட்டிலிருந்தபடியே வாசித்து பாஸாகி காலேஜில் சேரலாம். அல்லது டாக்டர், இஞ்சினீயர், வக்கீல் முதலிய தொழில்களுக்கு படிக்கலாம். ஏராளமான நற்சாக்ஷி பத்திரங்கள். ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸ்களை தபால் மூலம் கற்றுக்கொடுக்க விலை ரூ. 5. முன் பணம். அல்லது ரூ. 5-5-0 வி. பி. சார்ஜுடன். சொற்பகோர்ஸ்களே கைவசம் முந்துங்கள்.

புரொபஸர், A. S. அன்பையன், M. A., M. R. A. S.,
டைரக்டர், கேம்பிரிட்ஜ் இன்டிடியூட், நாகூர்.

ஜமீன்தாரர்களாலும், டாக்டர்கள், கலெக்டர்கள், ஜட்ஜிகள் மிட்டாதாரர்கள், வக்கீல்கள், தேசமக்தர்கள் தொண்டர்கள், வியாபாரிகள் முதலிய எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டு அநேக நற்சாட்சிப் பத்திரக்களும் தங்க பதக்கங்களும் பரிசுபெற்ற

சர்வரோக சஞ்சீவி.

புட்டி 1-க்கு விலை ரூ. 2. தபாற் கூலி வேறு.

இது மக்களுக்கு சிறந்த ஓர் குடும்ப ஔஷதம் .இதன் பூர்வ சக்தியைப் பரீக்ஷித்துப் பாருங்கள். சகல வியாதிகளையும் வெகு சீக்கிரத்தில் நிவர்த்திக்கும் சக்தி உடையது. இந்த சஞ்சீவியை சிறுவர்கள முதல் ஆண், பெண் முதலிய எல்லோரும் உள்ளுக்கும், வெளிக்கும் உபயோகப்படுத்தலாம். ஒவ்வொரு குடும்பங்களிலும் ஓர் புட்டி அவசியம் இருக்கவேண்டியது- பத்திமம் பாஷாண வகைகள் கிடையாது.

தீரும் வியாதிகள்:— ஜுரங்கள், ஜலிப்பு, மார்களி, இருமல், தொண்டைக்கம்மல், தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டைகுத்தல், மார்வலி, பல்வலி, இடுப்புவலி, பக்கவலி, விலாவாதம், மேகசூலை, பிடிப்பு பார்சவாய்வு, இளைப்பு, ஜன்னி, சயித்தியம், வயிற்றுவலி, வயிற்றால் போவது, இரைச்சல், அஜீர்ணம், வயிர்மப்பு, பசியில்லாமை, பித்தமயக்கம், காசம், க்ஷயம், குன்மம், கை கால் குடைச்சல், செவிநோய், முறை ஜுரம், பிளேக் கட்டிகள், விஷபேதி, சகஜின்னி சூதகவயிற்றுவலி, குழந்தைகளுக்கு ஏங்கல், வலிம்பு, கக்குவான். மாந்தம், வெட்டுக் காயங்கள், பாம்பு, தேள், நாய், எலி, முதலிய விஷக் கடிகள், வீக்கம், சொறி, சிரங்கு, அரிப்பு, தடிப்பு, சேத்துப் புண், முதலிய சகல வியாதிகளையும், கண்டிக்கும். கப்பல்பிரயாணத்தினால் பிரயாணிகளுக்கு ஏற்படும் வாந்தி, மயக்கம், முதலிய உபாதிகளைக் கண்டிக்கத் தக்கது. டிராமா நடிகர்கள், உபந்யாசகர்கள் முதலியவர்களுக்கு தொண்டையை சுத்தம் செய்வதில் அதிக வல்லமை யுடையது.

இராஜ வைத்திய ஆஸ்ரமம்,
செவ்வாய்பேட், சேலம்.

பர்தாவின் அநியாயம்

கோஷாவினால் நம் மூஸ்லீம்கள் அடைவது என்ன?

என்ன அநியாயம்! என்ன கொடுமை! ஒருபுதல்வனுக்கு ஒரு புதல்வியை மணம் செய்யவேண்டுமானால் பாவம் அந்தக்கல்யாணம் செய்துகொள்ளும் புதல்வன் அந்தப் புதல்வியைக் கண்ணால் பார்த்து மணம்செய்துகொள்ள விதியின்றி வேறு ஸ்திரீகளை அந்தப்புதல்வியை பார்த்துக்கொண்டு வரும்படி அனுப்புவது வழக்கம். அவர்கள் சென்று பார்த்து,குணத்திலும் ரூபத்திலும் எவ்வளவு கோரமாய் இருந்தாலும் புதல்வனுடன் அவள் ரூபலாவண்யத்தைக் குறித்தும் குணத்தைக் குறித்தும் புகழ்ந்து அவர்களின் மாயவலையில் சிக்கும்படிசெய்துவிடுகிறார்கள்.

மெய்தான் என்று நம்பிக்கொண்டிருந்த மாப்பிள்ளை அப்பெண்ணை விவாஹம் முடித்து தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து பார்த்தால், அவள் சைதானின் பாட்டியாகத்தானிருப்பாள். பிறகு அந்த மாப்பிள்ளையின் கெதி என்ன? அய்யோபாவம்! அவன் தலைமீதில் துணியை போட்டுக்கொண்டு வெளியே கிளம்பவேண்டியதுதான்- அய்யய்யோ என்ன பரிதாபம்! எவ்வளவு ஆசையாக பணம் வட்டிக்குவாங்கி செலவுசெய்தும் மனதிற்கு திருப்தியில்லாவிடில் எப்படித்தவிப்பான்! நம்ம இஸ்லாமதப்படிக்கு நிகாதுருஸ்தாகுமா? சகோதர சகோதரிகளே இந்தக்கொடிய வழக்கத்தை அறவேஒழித்து, பெண்ணை ஆண்பார்த்து, ஆணை பெண் பார்த்து சந்தோஷத்துடன் விவாஹம் செய்துகொண்டு சுகமாய் காலம்கழித்து வந்தால் செல்வமும் வேண்டாம், நகையும் வேண்டாம். மனதுக்கிசைந்த மனைவியைவிட உயர்ந்த செல்வம் உலகினில் வேறு உண்டா! இத்தகைய மனைவியை அடைந்த புருஷன் வெளியே சென்று எவ்வளவோ கஷ்டங்கள் அனுபவித்து வீட்டிற்கு வந்துபார்த்தால் அவன்பட்ட கஷ்டங்கள் ஒருதுரும்பாகவும் அநாவசியமாகவும் ஏன் தோன்றாது.

மேலே சொன்னபடிக்கு ஒருவரையொருவர் பார்க்காமல் விவாஹம் முடித்து, பெண் ஒரு கெதியும் ஆண் ஒரு கெதியும் அலைந்துகொண்டுலாவுபவரை நம் இந்தியாவில் கணக்கிடமுடியுமா? சகோதர சகோதரிகளே! இதை நன்றாய்யோசித்து நம்மைச்சூழ்ந்திருக்கும் கோஷா என்னும் கட்டிலிருந்து மும்மரத்துடன் வெளியே கிளம்பி அந்த அநியாய வழக்கத்தை அறவே ஒழித்து விவாஹம் நடத்தி வந்தோமானால் எவ்வளவு சுகமாய் காலங்கழித்து வருவோம்! ஐயோ! நாம் ஏன் எல்லோரும் சேர்ந்து மார்க்கத்தின்பேரால் கோஷா என்று சிறையில் வைத்து அவர்களைக் கெடுக்கவேண்டும். ஏன் அந்தபாவத்தை தலைமீதில் போட்டுக்கொள்கிறீர். அந்தக் கொடியவழக்கத்தை ஒழித்து அந்த மாயவலையில் சிக்காமல் சுகமாய் காலம் சழிக்கும் வழியைத்தேடுங்கள்.

M. S உசேன் சாயபு

B. ABDUL KARIM SAHIB,
KAREEMIYA UNANI MEDICAL STORE,
CUDDALORE, O. T., (South India)

அருமை துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!!

இழந்து போன பலத்தையும், நலத்தையும், நரம்புத்திடத்தையும்,

நமது

மதன மோஹன வீரதத்துவ லேகியம்.

உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

அசல் பாகம்! அருமையானது!!

பரிக்ஷைக்கும் பலனுக்கும் உக்கிரவாத முன்மாது. ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும் தங்கமெடல்களும் பரிசு பெற்ற நமது மதன மோஹன வீரதத்துவ லேகியத்தை புசித்தவர்களே அறிவார்கள். இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்றும் சத்தியமாகச் சொல்கிறவர்களுக்கு மருந்தின் கிரயம் திரும்ப வாப்பீஸ் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும் பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய வல்லமை சக்திகளும் வாய்ந்த இந்த லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் மணவாழ்க்கையிலே நாம் என்றும் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சுகவின்ப நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்து சொல்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோஹத்திய 'காமசஞ்சீவினி'' இதுதானோ! என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆணாய்ப்பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம்,பிள்ளைப் பருவத்திலேயே மின்னார் மோகக்கன்னியிற் பட்டுக்கெட்டும், இன்னும் பலவிதக்காரணங்களினாலும் தேகத்திற்குச் சத்காரணமாகிய நாதவிந்தை வீண் விரயஞ் செய்தும், நல்லவாலிபப் பருவத்தில் வீரிய விர்த்தி குறைந்து உலகின்பசக்தியை இழந்து ஆண் தன்மையற்ற வயோதிகர்போல் மயங்கி நிற்கும் புருஷர்களும் வாத பித்த சிலேற்பன மிகுதிக்குறைவாலும் எலும்புருக்கி வெட்டைச் சூட்டினாலும் ஜீவரத்தின பீடமாகிய சுக்கிலம் ஜலம்போல் நீர்த்து துரிதஸ்கலித முடையோரும், நித்திராபங்கமென்னும் சொப்பனஸ்கலிதத்தால் நாளும் வாதனைப் பட்டுக்கொண்டிருப்பவர்களும் சுரம், பிரமேகம், விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் குறைந்து நாதம் இளகி சர்வ நரம்புகளும் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமுங் குறைந்து, வியாபக சக்தி குறைவு, கைகாலசதி தேக காங்கை, இடுப்புவலி, பசி மந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோதத்துவ புத்தி சாதுர்யத்தைக் கொண்டு வேலை செய்யக்கூடிய எந்தத் தொழிலாளர்களுமே இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும் சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேகக் கட்டுப்பாட்டையும் வியாபகவிர்த்தி புதியமேனியையும் இரத்தவிர்த்தி வீரியவிர்த்தி சந்தான விர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். சீக்கிரஸ் கலிதமுடையவர்களுக்கு இது ஒரு இணையில்லாத பரம சஞ்சீவியேயாகும். குணம் செய்வதில் இது மஹாவல்லமையும், பேரும் பிரகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களும் தப்பாமல் குணம் செய்யும் சத்தியமான சித்தானந்த யோக பாகம் இதுதான் என்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை, பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்குணங்களும் ஒரே வேளையில் தெரியும், கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! தன்னை பலப்படுத்திக்கொள்ள நாடும் போகவான்கள் கட்டாயம் ஓர் முறை பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும். ஆர்டர் செய்யும் கனவான்கள் இந்த பேப்பரின் பெயரைக் குறித்து எழுதவும்.

40-நாள் மருந்து 16-பலம் டப்பி 1-க்கு விலை ரூ. 9—0—0.
20-நாள் மருந்து 8-பலம் டப்பி 1-க்கு விலை ரூ. 5—0—0.
10-நாள் மருந்து 4-பலம் டப்பி 1-க்கு விலை ரூ. 3—0—0.

பாக்கிங் & V. P. செலவு பிரத்தியேகம்.

B. அப்துல் கரீம் சாயபு,
கரீமியா யூனானி மெடிக்கல் ஸ்டோர்,
கூடலூர், O. T.

ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றாடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வராது. இந்த லேகியத்தில் கழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை „ 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஜீவ ரக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S. I. R.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யுண்டு பாடம் சொல்லிக்கொடுக்கும், தில்லைவாழ் அந்தணர்களும் நம்பி ஆண்டாரும் சுந்தரரும் பாப்பார்கள். அதனால் தானேசுவாமியும் பாப்பாருக்கு வந்து முதல் அடி எடுத்துக் கொடுத்தாரோ? வென்று நாங்கள் கேட்கமாட்டோம். அகச்சான்று வகுத்ததும் தொகுத்ததும் பண்டிதர்களாயிருக்க எந்த எட்டையும் எந்தச்சாற்றிலும் சோற்றிலும் கலக்கலாம் என்று நாங்கள் சொல்லிப் பயப்படுகிறோம். ஏனெனில் நம்பியாண்டார் நம்பி பெரியபுராணத்தில் பொய்யைப் புகுத்திவிட்டாரென்று பெரியபண்டிதரான் சுவாமி வேதாசலம் அவர்கள்சொல்லலாம். சிதம்பரத்திலிருக்கும் உறிஞ்சிப்பிள்ளையார்கூட நாககன்சொல்லும் குற்றத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. கடவுள் கருணையில்லா விட்டால் சுந்தரமூர்த்தி திருத்தொண்டர்களைச் சொல்லமுடியுமா? சேக்கிழார்தான் புராணம் எப்படி செய்யமுடியும்? "என்னவாக்கு! என்ன அடுக்கு! என்னப்பதச்சேர்க்கை! என்ன அழகு!" என்று பண்டிதர்கள் பக்தியில் அழுகலாம். ஆனால் அழுகைதெய்வாம்சமென்று யாரும் ஒத்துக்கொண்டதில்லை.

மிருகங்களில் சிங்கமாகவும், பட்சிகளில் ராஜாளியாகவும், மீன்களில் கொம்பன் சுறுவாகவும், மனிதனில் ராஜாவாகவும், நஞ்சையில் மகசுடியாகவும், புஞ்சையில் மலையடியாகவும், தோட்டத்தில் ஊரடியாகவும், எல்லாவஸ்துக்களிலும்உயர்ந்ததாகவும்,நானிருக்கிறேன் என்று நமது கிருஷ்ணன் சொன்னார். சிவமென்றாலே சந்தோஷமென்று அர்த்தம்; சந்தோஷமான சிவமென்னும் கடவுள் நிறைந்திருக்கும் நம் வீடுகளில் நாளைவரும் தீபாவளியில் குரநாட்டுப் புடவைக்கும் பெங்களூர் பட்டுக்கும், சேலம் குண்டஞ்சு வேஷ்டிக்கும், குஷாக்தாஸ் கடை சிமை ஜவுளி நினுசுக்கும், எங்கே வருந்தவதை தள்ளி விட்டாலும், ஒருபடி புழுங்கரிசிக்கும் கால்படி உளுந்திற்கும் கவைதல், கடவுள் நிறைந்த கருணையுடையநாட்டு தெய்வாம்சமெல்லாம் மேலேறு போய்விட்டதில்லவா?

இராமநாதபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி மீட்டிங்.

வருகிற நவம்பர் மாதம் 8 தேதி மதுரை நாவஷனல் ஸ்கூலில்இராமநாதபுரம் ஜில்லாக்கமிட்டிக் கூட்டம் கூடப்பட்டிருக்கிறது.

இராமநாதபுரம் ஜில்லா சம்பந்தப்பட்ட கமிட்டி அங்கத்தினர்கள் தவறாது மேல்படி கமிட்டி கூட்டத்திற்கு விஜயம்செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

தீர்மானம்

1 கிராம அங்கத்தினர்கள் சேர்க்கெடுத்தல்.
2 காரைக்குடி ஜில்லாக்கமிட்டியை இராமநாதபுரம் ஜில்லாக்கமிட்டியுடன் சேர்ப்பதற்குரிய யோஜனை செய்தல் காரியதரிசி

திரு. பி. இராஜ ராம பாண்டியன்

இழந்தபலத்தை திரும்பக் கொடுக்கும் மன்மத கோலாகல குளிகை.

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்பவரும். நல்ல ஜீரணம், ரத்த விர்த்தி, இந்திரியக்கட்டு, போக சக்தி, தாது புஷ்டி இவற்றை தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும். 120-குளிகை ரூ. 10—0—0. 60-குளிகை ரூ. 5-0-0 30-குளிகை ரூ. 3—0—0 20-குளிகை ரூ. 2—0—0.

குருநாக பஸ்பம்— மூலத்திற்கு,

ஆப்ரேசன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ் மூலம், ரத்த மூலம், குத்தல், மூலமுளை, மல பந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்தஒளஷதம். 1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூ. 30—0—0. 24-நாள் பஸ்பம் ரூ. 15—0—0. மாதிரிக்கு 6-நாள் புட்டி 1-க்கு ரூ. 4—0—0.

பிரமேக நிவாரணி

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் குணமாகும். தவறாது. புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

கெர்ப்ப எண்ணை

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம், மாதாந்தர வயிற்றுவலியை உடனே நிறுத்தும் சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை, இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

பினாங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

C. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இலவசமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்ரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், நிறம், வாடை, குணம் அமைந்துள்ளது எங்கள் உலக டிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்

(V. 120) ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு!

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் நேர்த்தியான அச்சு

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.



இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க்பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன, உண்மையான கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும்நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனும்.

வாஸன் புஸ்தகசாலை,

244, தங்கசாலைத் தெரு, தபால் பெட்டி நெ. 119 ஜி.டி. மதராஸ்.

'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு
உழைத்துவரும் ஒரு
வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பண்ணாச்சாரி

இதன் வருட சந்தா ரூ 3—0—0
வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,
விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.

தீபாவளி! தீபாவளி!!

நவீன கலர்புடவை.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட் கருப்பு, செகப்பு, ஸ்கைப் கலர்கள், கெட்டிச் சாயம், கரையிலும், முந்தியிலும் பூவேலைமான முள்ள நூதன புடவை.

18 மு X 46 அங் புடவை ரூ. 4...14—0
ஷை கலர்களில் சாதா புடவை 4— 4—0

கைநிசவில் தயாரித்த உடல் செகப்பு, கருப்பு, பலமாதிரி புள்ளிகள் போட்ட ஜரிகை உத்திராட்சம் பேட்டுவைத்து 1 இஞ்சு ஜரிகை முந்தி போட்டது.

18 மு X 46 அங் புடவை 1க்கு ரூ. 7-0-0
ஷை ஜரிகை பெங்களூர் முந்தி போட்ட புடவை 1க்கு 7-12-0

6th Edition கேட்லாக் இனாம்.
The Madura Oriental Trading Co,
Laxmi Cloth Store, Madura- (S. I.)

பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. நிதுசகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதை-அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

கணித சோதிடம்.

பரிதி கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதிஅனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதிஅனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப்புருஷனும் புருஷனுக்குப்பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம அருமையான பூர்வீகசோதிட நூற்களும்பலவுள்ளதால் நாங்கள் எழுதிஅனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விஶேஷமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்பேட்டை, புதுச்சேரி.

---

64 — பக்கம் — 64

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆனந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட 1...0...0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1...4...0

மாதிரி காபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244. தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்". டெலிபோன் நே. 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுநூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{2}$x $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

காண்டியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.